உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சஷ்டிபூர்த்தி

## மகோற்சவப்பிரசுரம்

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

(மணவழகு)

## ஜீவியசரித்திரமும் - குருதோத்திரமும்

இவை

மணவழகின் மாணவர்கள்

இயற்றியன

சென்னை

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றன

ஆனந்தஹு - சித்திரைமீ

1914



சித்தாந்தசரபம்

அஷ்டாவதானம் - பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்.

சு. அ. இராமசாமிப்புலவர்,
கருப்பக்கிளர். (அஞ்சல்)
கோட்டூர் வழி. தஞ்சை மாவட்டம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

# ஜீவியசரித்திரம்

அருக்கனே ரவதானி சித்தாந்த சரபநல் லறிஞர் கோமான்
பெருக்கமே வியபூவைக் கலியாண சுந்தரப்பேர்ப் பெரியன் ஞான
வருக்கமார் சுத்தாத்து விதவாரி யிற்றிளைத்தோன் வன்ச ரித்ரம்
உருக்கமோ டேயுரைக்க வோரைங்க ரத்தேவை யுன்னு வேமால்.

"தொண்டைநன் னாடு சான்றோ ருடைத்து" எனப் பூலோக சரஸ்வதியாகிய ஔவை பிராட்டியாராற் கொண்டாடப் பெற்றதோர் ஜயங்கொண்ட தொண்டை மண்டலத்திலே, புலியூர்க் கோட்டத்திலே, புத்துவேடு * நத்தத்திலே, சிறப்பெற்ற உயர் துளுவ வேளாளர் குலத்திலே, பூவிருந்தவல்லியார் மரபிலே, அறுபான் மும்மை நாயன்மார்களில் ஒருவராய வாயிலா நாயனார் பரம்பரையிலே, செங்கனவராய கோத்திரத்திலே **சாமிமுதலியார்** என்பவரொருவ ரிருந்தனர். இவர் தமிழ் ஆங்கிலம் துலுக்கு முதலிய பாஷைகளிற் சிறந்து இராஜாங்க தந்திர நிபுணரா யிருந்தமையின், ஆங்கிலேய இராஜாங்கத்தாரால் சிபாரிசு செய்யப்

* புத்தவேடு எனும் கிராமத்திலேயே வாயிலா நாயனார் அவதாரஞ் செய்து அனேக வற்புதங்களை நடத்தி, அவ்வூரிலிருந்த புத்தர்களை யெல்லாஞ் சைவராக்கிப் பின் திருமயிலையிலேயே மவுனமா யிருந்து விட்டனர். இவ்வுண்மை அவதானியார் வெளியிட்டுள்ள "வாயிலா நாயனார் வைபவம்" எனு நூலிற் காணலாம். "புத்த" என்பது புறப்புறச்சமயர் பெயராகலின், அப்பெயரமைந்த வூரினைத் தன்பெயருக்கு முன்வைக்க அவதானியாருக்குப் பிரிய மின்மையின், அக்காலத்தில் இக்கிராமத்தினை உட்கிடையாகக் கொண்டதும், தம்மரபினைத் தெரிவிப்பது மாகிய பூவிருந்தவல்லி என வழங்கும் "பூவை" எனுமரூஉ மொழியைத் தமது பெயருக்குமுன் னமைத்து வழங்கி வருகின்றனர்.

பட்டு, ஐதராபாத் நைஜாமவர்களிடத்தில் கொத்தவா லுத்தியோகமாக ஆயிரம் ரூபாய் சம்பளத்தி லிருந்து நற்கீர்த்திவாய்ந்து வந்தனர். ஒருகாலத்தில் இவர் நைஜாமுடன் வேட்டைக்குப்போயிருந்தபோது, ஒரு காட்டிலிருந்தே பதினாறடி வேங்கையொன்று எதிர்த்துக் கொள்ள, முதலியார் நைஜாமை நோக்கி, இப்புலியினை யுடனே கொல்லட்டுமா? அல்லது சிறிது நேரம் விளையாடி வெல்லட்டுமா? எனக் கேட்க, நைஜாம் நினது இஷ்டப்படி செய்கவென, முதலியார் அரைமணி நேரம் அப்புலியுடனே யெதிர்த்து விளையாடிப் பின்னர்த் தமது கைப்பட்டாக் கத்தியால் முன்னிரண்டு கால்களையும் வீசி யெறிந்தனர். நைஜாமவர்கள் ஆச்சரிய மடைந்து முதலியாரவர்கட்கு அனேகமான பரிசுகளைக் கொடுத்து ஆயிரம் ரூபாயே உபகாரச் சம்பளமாகச் செய்து, சென்னைக் கனுப்பி விட்டனர். இவருக்குப் பின், இவர் குமாரர் சுப்பராயமுதலியார். இவரும் இவர் தந்தையாரைப் போலவிருந்த பராக்கிரம சாலியாக விருந்தனர். அக்காலத்தில் சென்னையிற் பிரசித்தியுற்ற போல் ஐயாப்பிள்ளை யென்பவர் தமக்கு ஒரு மாட்சிமையான வீடொன்று கட்டி முடித்து அதைப் பார்க்கும்படி கவர்னர்முதலான ஐரோப்பியர் களையும், சென்னையிலுள்ள கௌரவமான பிரபுக்களையு மழைத்தனர். அவர்கள் அம்மாளிகையின் சௌந்தரியத்தினைப் பார்த்துக்கொண் டிருக்கையில் அவ்வீட்டின் தம்பங்களின் ஆகிருதியைக் கண்டு இத்தூண்கள் யானைகளாலு மசைக்க முடியாதென, சமீபத்திலிருந்த இம்முதலியார் தம்பமொன்றினைத் தனது வலதுகரத்தால் மார்போடணைத்து அசைக்க அத்தூண் காலங்குல நகர்ந்தது. யாவருமிவர் சௌரியத்தைக்கண்டு வியந்து மிகவும் பாராட்டினர். கவர்னர் இவரை Illustrious hero (வீரமார்த்தாண்டன்) எனப் புகழ்ந்தனர். இக்காலத்தும் அவ்வீட்டினைப்போய்ப் பார்த்து ஆச்சரியமுறுவார் பலருண்டு. அது ஐயாப்பிள்ளை வீதியிலேயே யிருக்கின்றது. இத்தகையராகிய இவர் தமது தந்தையி னுத்தியோகத்தில் அதேசம்பளத்தி லமர்ந்திருந்தனர். சிலவருடங்கட் குப்பின் இவருமுபகாரச் சம்பளம் பெற்றுச் சென்னைக்குத் திரும்பியபின், ஆறுகாடு நவாப் அவர்க ளிடத்தி லொரு பெரிய வுத்தியோகத்திலமர்ந்து வாழ்கையில், ஒரு காலத்தில் நவாப்புடன் சென்னையிலிருந்து நாகூருக்குப் போக நேரிட்டுப் பூவிருந்தவல்லிக்குச் சமீபத்தில் தங்கி யிருக்கையில், தனக்குப் புத்திரன் பிறந்து செய்

தியைக் கேட்ட நவாப் அதிக சந்தோஷத்தினால் அந்த இடத்திற்கு நஜரத்பேட்டை யெனப் பெயர்வைத்து, முதலியாரவர்கள் சொந்த கிராமமாகிய புத்தவேட்டில் அனேகமான நிலங்களை இனுமாக முதலியாருக்குக் கொடுத்தனர். முதலியார் தனக்கிருந்த அபார செல்வத்தால் அந் நிலங்களைக் கவனியாததால் அவர் பங்காளிகள் அவற்றைக் கிரகித்து விட்டனர்.

இம் முதலியார் குமாரர் அண்ணுசாமிமுதலியார் என்பவர். இவர் பஞ்சதந்திர மியற்றிய வித்துவான் தாண்டவராய முதலியாரவர்க ளிடத்தில் தமிழ் நன்கு தேர்ச்சியுற்று ஆங்கிலேயத்தும் விற்பத்தி யடைந்து சிலம்ப வித்தையிலு நன்கு தேறி அதிவீர தீரராய் இருகை பட்டா அண்ணுசாமி முதலியார் எனும் படி கீர்த்திவாய்ந்திருந்தனர். அக்காலத்தில் பிரசித்தியுற்றிருந்த இராமச்சந்திர கவிராயர் என்பவர்,

சந்ததமும் புகழைத ராபாத்நை ஜாமவர்கள் சமூகந் தன்னில்
தனிகொந்த வாதுத்தி யோகத்தி லேசிறந்த தகைமை வாய்ந்த
சுந்தரஞ்சேர் சுப்பரா யக்கோமான் றவவுருவாத் தோன்றி வந்த
செழுமார னுயர்தீரன் மிகுவீர னுபகாரன் திகழு தாரன்
வந்தவர்க் கின்றுவா நாளைவா வெனச்சொலா வண்மை யேய்ந்தோன்
மகிமைபெறு கோல்வரிசை குஸ்திபட் டாமுதல் வழங்கத் தேர்ந்தோன்
எந்தைநிகர் புத்தவே டண்ணுசா மிச்சீமா னென்பா லன்பாய்
என்றனைக்கு பேரனென வேசெய்தா னொருதினத்தி லிருநி லத்தே.

என விவரைப் புகழ்ந்து பாடி யுள்ளார். இம் முதலியார் கமிசேரியட் டிபார்ட் மெண்டில் உத்தியோகமா யமர்ந்து இரங்கூன் பர்மா முதலிய தேசங்களிற் சிலவாண்டிருந்து திரும்பிப் பரங்கிமலையில் தனது மனைவியார் உண்ணுமுலை யம்மாளுடன் வாழ்ந்து வருகையில், இவருக்கு இரண்டாவது புத்திரனை இச் சரித்திரத் தலைவர் ஆனந்தவருடம் சித்திரைமாதம் இருபத்தொன்பதாந் திகதி (10-5-54) புதன்கிழமை பிறந்தனர். அக்காலத்தில் இவருக்கு முன் பிறந்திருந்த சுந்தரவடிவு முதலியார் வாசித்துக் கொண்டிருந்த பள்ளிக்கூடத்துப் பிராமண உபாத்தியாயர் இக்குழந்தையின் சாதகங் கணித்துக் கலியாணசுந்தரம் எனப் பெயரிட்டழைக்கும்படிச் சொல்லி, கிரகங்களுக்குத் தலைமையாகிய சூரியன், முதலாகிய மேஷவீட்டிலேயே இக்குழந்தைக்கு அமைந்திருந்தமையினல் கல்வி மன்னனாக விருக்குமெனவும், வாக்கில் இராகு இருப்பதால் நன்மையாகப் பாடினும், தீமையாகப்

பாடினும் பலிக்குமெனவுங் கூறி, அடியிற் குறித்த விரண்டு செய்யுள்களைச் செய்து அனுப்பினர்.

பேர்பெறுங் கலியுக சகாப்தத்தி லைம்பொடு பிறங்குநா லாயிரத்துப்
பின்னுந்தொ ளாயிரத் தைம்பானே ழுடனிகழ் பேசுமா னந்தவருடம்
சீர்பெறுஞ் சித்திரை மதிதிகதி யிருபத்தொன் பதிற்பிரபல திரயோதசித்
திதிதனில் புதவாரங் கவுலவா கரணஞ் செறிந்திலகு மேடலக்னம்
ஏர்பெறுஞ் சூர்யோத யாதியை யைங்கடிகை யெழிற்பெருகு சித்திரைநா
ளினிலீ ரிரண்டாய பாதமிவை யாவையு மியைந்தநற் சுபதினத்தில்
கார்பெறு மதிற்புத்த வேட்டிலன் ஞானசாமி காளமேக னிற்கனிஷ்டன்
கங்கைக்கு லத்துளான் கலியாண சுந்தரன் காசினியில் வந்தனனரோ.

மேடலக் கினத்திற் சூர்யன் மேற்புத னிரண்டிடில் மேற்கோள்
நீடிய ராகு மைந்தி னிகழ்த்துசெவ் வாய்து லாத்தில்
பீடுறு மதியோர் பத்திற் பிரகஸ்பதி வெள்ளி மீனில்
சூடினரே கல்யாண சுந்தரன் ஜனித்த போழ்தே.

| | | | |
|---|---|---|---|
| சுக் | ல சூ-பு | ரா சனி | |
| குரு | இராசி. | | செ |
| | கே | சந் | |

இச்சிறுவருக்கு முன்பிறந்த தமையனொருவர், பின்பிறந்த பெண்மணிகள் வடிவாம்பிகையம்மாள், திரிபுரசுந்தரி யம்மாள், மாணிக்கம்மாள், புஷ்பவள்ளி யம்மாள் நால்வர். இவர் தந்தையாரைப் பூவிருந்த வல்லிக்கு இராஜாங்கத்தார் உத்தியோக மூலமாக மாற்றிவிட அவ்வூரிலேயே பூங்காவன உபாத்தியாயர் என்பவரிடத்தில் இச்சிறுவர் படித்து வந்தனர். இவர் சிறிய வயதிற்றானே சுறுசுறுப்பாய்ப் படிக்கவும், மிக வூக்கத்துடனுங் கவனத்துடனுஞ் செய்யுள்களை மனனஞ் செய்து ஒப்புவிக்கவும், எப்புத்தகங்களையும் பிழையின்றி வாசிக்கவும் வல்லுநரா யிருந்தனர். உபாத்தியாயர் இவரிடத்தில் மிகுந்த பட்சம் பாராட்டி அனேக அந்தாதி கலம்பகம் சதகம் பிள்ளைத்தமிழ் திருப்புகழ் நிகண்டு முதலிய சொல்லி வைத்தனர். இவருக்கு வீணே விளையாடுஞ் செயல் சிறிதுங் கிடையாது. எப்போதும் புத்தகமுங் கையுமாயிருப்பர். வளர்மதிபோ லிவர்மதியு மபிவிருத்தி யடைந்து வந்தது. இவருக்குப் பல செய்யுள்கள் மனனமான படியால் இவரை யறியாமலே

பூர்வபுண்ணியத்தால் இவர்வாயில் அநேக நூதன செய்யுள்கள் வந்து கொண்டிருந்தன. சிறுபருவத்திலேயே கவிபாடும் வரம் இவருக்கு வாய்ந்தது. இவர் வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்திற்குப் போகையில் இவரிருந்த வீதியின் கோடியிலுள்ள சுந்தர விநாயகர் கோயிலெதிர் நின்று தினந்தோறும்,

வாத்தியார் சொல்லிவைக்கும் வன்மையுள பாடமெலாம்
நேர்த்தியா யென்மனதி னேர்மையுடன்—பூர்த்தியுறச்
சுந்தரவி நாயகனே தூய்மைபெறு நின்றுளென்
சிந்தையினி லேயிருக்கச் செய்.

என்று தோத்திரித்துக் கொண்டு போவார். இச்செய்யுளைத் தன்னுடன் கற்கும் பிள்ளைகட்குஞ் சொல்லிவைப்பார். அக்காலத்தில் இச்செய்யுளைக் கற்ற செட்டிமார்கள் பூவிருந்தவல்லியி லிப்போதும் சிலருண்டு. அக்காலத்தில் இச் சிறுவருக்கு வெண்பாவிலக்கணஞ் சிறிதுந் தெரியாது. மற்றைய பிள்ளைகளும் இவரை மிக நேசித்து வந்தனர். இவருக்கு இவர் தந்தையார் திருமுருகாற்றுப்படையைத் தினமு மொருதரம் வட்டமிடும்படி கட்டளையிட, அங்ஙனமே இவர் ஒருநாளுந்தவறாது அப்பியசித்து வந்தனர். இன்றும் இவர் தந்தையின் அக்கட்டளையை நிறைவேற்றி வருகின்றனர். இவர் திருவரங்கக்கலம்பகம் படித்து வருகையில், உபாத்தியாயர் ஒரு நாள் "வாடி யோட வைசமன்னன்" என்ற செய்யுளைச் சொல்லி வைக்கையில், அதில் "முருகனோட" எனக்கேட்ட மாத்திரத்தில் முருகக்கடவுளைத் தூஷிக்கும் இக்கலம்பகத்தை யினிப் படியேனென்றனர். உபாத்தியார் எவ்வளவோ பய முறுத்தியும் இவர் தந்தையாரைக் கொண்டு சொல்லி வைத்தும் மறுத்து விட்டனர். பின்னர் உபாத்தியாயர் திருவருணைக் கலம்பகம் படிப்பித்தனர். அச்செய்யுளில் இச்சிறுவருக்கு அக்காலத்தி லேற்பட்டிருந்த குரோதத்தைத் தமது முப்பத்தெட்டாவது வயதிற் பாடிய திருவொற்றியூர்க் கலம்பகத்தில்,

வேதனோட வெள்ளைமேனி யாளுமோட விண்ணவர்
 வேந்தனோட விந்திராணி வெருவி யோட விண்டிசூழ்
சீதனோட வெயிறுதிர்ந்து தினனுமோட மகிடமூர்
 தென்னனோட விவனவாவு தேவியோட விண்டெனும்
தாதனோட மலரின்மாது தானுமோட விரதியுந்
 தவறியோட வேனிலாளி தாவியோட வுரகர்க
ளாதனோட யாகசுத்த னவிரமோட வெற்றியா
 னூர்தகர்த்த டக்கைகொண்ட நல்லவொற்றி நம்பனே.

எனப் பாடித் தணிந்துக்கொண்டனர். ஒரு நாள் உபாத்தியாயர் தமது வீட்டிலிருந்து பள்ளிக்கூடம் வருகையில் பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருக்கக் கண்டு ஒவ்வொரு சிறுவனையும் பிரம் பினு லடித்துக்கொண்டே வருகையில் விளையாடா திருந்த இச்சிறு வர் தொடையினும் அடித்து விட்டனர். இவர் மிக மனம்வருந்தி,

எந்தவித குற்றமுமியான் ஜின்றுசெய் யாதிருக்க
எந்தன் றொடையதனி லேன்சூடு—வந்ததெனப்
பூரணமாய்க் கல்விகற்ற பூங்கா வனக்கவியைக்
காரணநீ கேட்டிடுக கண்டு.

என வோலையி லெழுதி யுடனே தமது தந்தைக் கனுப்பிவைத் தனர். இச்செய்யுளில் " எந்தன் " என்பது என்றன் என விருக்க வேண்டுமென்பது அக்காலத்திலவருக்குத் தெரியாது. தந்தையார் செய்யுளைக் கண்டவுடன் உபாத்தியாயரிடம் வந்து அச்செய்யுளைக்காட்ட அவர் மிக வெட்கி, இனி யாதொன்றுஞ் செய்வதில்லை யெனக் கேட்டுக் கொண்டும், மறுத்துச் சிறுவனை யழைத்துக் கொண்டு போய் ஐரோப்பியர்களின் பிள்ளைகளும் பெண்களு மாத்திரம் வாசித்துவரும் காத்ருலிக் பாடசாலையில் தக்க சிபாரிசின் பேரில் சேர்ப்பித்து இங்கிலீஷ் படிக்க வைத்த னர். இவரிப் பாடசாலையி லிரண்டு வருடம் படித்தபின் பழைய பூவிருந்தவல்லியிலுள்ள தாலுக்கா பாடசாலையிற் சேர்ந்து படிக்க வாரம்பித்தனர். இவர் ஒரு நாள் சிலபிள்ளைகளுடன் பாடசாலையி லிருந்து ஒரு கீரைத் தோட்டத்தின் வழியாக வீட்டிற்கு வருகை யில், சூரனெனும் அத்தோட்டக்காரன் கீரைப் பாத்திகளை மிதி த்துவிட்டன ரெனுங் கோபத்தினால் வெளி யோடிவந்து அப் பிள்ளைகளைத் துரத்தி யடிக்க வாரம்பிக்கையில் எல்லோரு மோடி விடப் பொறுமையாக வந்துகொண்டிருந்த இச்சிறுவனை யடித்து விட்டனன். உடனே,

தோட்டக்கா ரச்சூரன் றேன்றி வளாரடியைப்
போட்டான் முதுகில் பொறுக்கேனென்—தோட்டிதழ்சேர்
தாராருங் காளியே தாரணியி லன்னவனைப்
பாராம லேயிருக்கப் பண்.

எனப் பாடி, அத்தோட்டத்தி னொருபக்கத்தி லிருந்த காளிகோயி லின் முன்படித்து விட்டு வந்தனர். அன்றிரவு அச்சூரன் தெய்வச் செயலாய் ஏற்றக் கோலின் மீதிருந்து விழுந்து மரணமடைந்தனன்.

பின்ன ரொருநாள் பூவிருந்தவல்லியிலிருந்து பரங்கிமலைக்குத் தமது பெரியதாயாரைப் பார்க்கச் செல்லுகையில், வழியி லொருவர் கண்டு அவ்வம்மையார் மறைந்து விட்டனரெனக் கேட்டு,

அக்கரையா யென்னன்னை யன்புடனே பெற்றதுபோல்
தக்கபடி காத்திட்ட தாயாரைத்—துக்கமுடன்
நீக்க வலமலையே நேர்பிருங்கி மாமலையே
தாக்குற்றாய் விம்மலையே தான்.

எனப் பாடித் திரும்பிவிட்டனர். இவர் தாலுக்கா பாடசாலையிற் படித்து வருகையில், சேஷாத்திரி ஐயங்கார் என்னு மவர் உபாத்தியாயர் தமது சிநேக ரொருவரிடத்தே,

நான்முகனை நாராய ணன்படைத்தா னான்முகனுந்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்—யான்முகமாய்
அந்தாதி மேலிட் டறிவித்தே னாழ்பொருளைச்
சிந்தாமற் கொண்மினீர் தேர்ந்து.

என்ற நாலாயிரப் பிரபந்தச் செய்யுளைச் சொல்லி யுரைசெய்து கொண்டிருக்கையில் வகுப்பி லிருந்த இச்சிறுவர் தமது கற்பலகையில்,

சங்கரனை நாரணனைத் தான்படைத்தா னம்மாலே
பங்கயனைப் பெற்றெடுத்தான் பார்மிசையில்—துங்கமுடன்
சத்தியமா யாரணங்கள் சாற்றியது மெய்யுணர்வீர்
நித்தியத்தைப் பெற்றுய்ய நீர்.

எனவெழுதி உபாத்தியாயருக்குக் காட்டினார். அவரிதேது பாட்டென்றார். சிறுவர் மவுனமுற்றனர். அடுத்திருந்த பிள்ளைகள், இது இவ ரிப்போது பாடிய பாட்டென்றும், இவருக்குப் பாடும் பழக்க முண்டென்றுந் தெரிவித்தனர். உபாத்தியாயர் சந்தேக முற்றுச் சிறுவனைச் சமீபத்தி லழைத்துத் தைரியங் கூறி, தம்பி! இன்று காஞ்சிபுரத்தில் வரதராஜ சுவாமிக்குக் கருடோற்சவ மானதா லவனைவியந்து ஒருசெய்யுள் செய்கவென,

மெச்சும் புகழ்வரதர் மென்கருடன் மீதேறிக்
கச்சியினி லேயடைந்தார் கம்பீர—முச்சிதமாய்
மன்னியவே கம்பர் வலனுரைகா மாட்சிமெய்யுறு
மன்னனையினைச் சுற்றுவ தால்.

எனப் பாடினர். உபாத்தியாயர் கேட்டு வியப்பு மகிழ்ச்சியு மடைந்து இச்சிறுவருக்குச் சமயத் துவேஷ முண்டென வெண்ணி,

அன்று முதல் பாடங்களை நன்கு கற்பியாது வந்தனர். இச்சிறுவருக்கும் இவர் தமையனாருக்கும் இவர் தந்தையார் சிலம்பவித்தையிற் பழகுவித்தனர். இவ்வித்தையால் தேர்ந்த மல்யுத்தம் சிறுவருக்குக் கல்வியுத்தமாய் முடிந்தது. 1869-ல் சென்னைப் பச்சையப்பன் பாடசாலையில் சேர்ந்து படிக்க வாரம்பித்தனர். 1870-ல் பூவிருந்தவல்லியி லிருக்கும் ஊற்றுக்காட்டம்மையின்மீது ஒரு பதிகம் பாடினர். அக்காலத்தில் சென்னையிற் பிரசித்தியுற்றிருந்த சொர்க்கபுரம் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளிடஞ் சென்று,

இலக்கிய வாரிமடுத் தீர்ங்கவிப்பா வாணர்க்
கிலக்கிய மாரிபொழிந் தென்று—மிலக்கியமார்
நண்ணு மிராமலிங்க நன்முகிலே யென்மனமாம்
பண்ணையினு மேகிரம்பப் பன்.

எனப் பாடியீந்தனர். அவ ரதுகண்டு அன்று முதல் இவரிடத்தில் மிருந்து விசுவாசமாக விருந்து, பெரியபுராணம் திருவிளையாடற்புராணம் கந்தபுராணம் திருக்கோவையார் யாப்பருங்கலக்காரிகை முதலிய சொல்லிவைத்தனர். 1872-ல் காஞ்சிபுரம் சென்று சிவதீட்சை பெற்றுவந்து அவரிடத்தே சிவப்பிரகாசம் சிவஞான சித்தியார் சிவஞானபோத முதலிய பாடங் கேட்டு வைதிக சைவாநுட்டானம் கைவரப் பயின்று, கேவலாத்துவித வேதாந்த சாத்திரங்களையும் சித்தாந்த பார்வையாற் றேர்ந்தனர். இவ் வருடத்தில் திருவொற்றியூர்த் தியாகேசர்பதிகம் வடிவுடையம்மை பஞ்சரத்தினம் கல்யாணசுந்தரர் பதிகம் பாடினர். வடலூர் சென்று ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளைத் தரிசித்து அவராசிர்வாதம் பெற்று வந்தனர். 1873-ல் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திருமயிலையில் வந்திருக்க அவ்விடஞ் சென்று,

சீர்பெருகுஞ் சிரபுரத்து மீனாட்சி சுந்தரநற் செம்மலேறே
ஏர்பெருகு நின்வீட்டு வாயலினி னிற்கின்றே னெனையழைத்துப்
பேர்பெருகுங் கல்விநல மென்மேலு மென்றனக்குப் பிறங்கி யோங்கு
வார்பெருகு நின்னாசி யினைக்கூறி யன்புடனே யாட்கொள் வாயே.

என வெழுதி யனுப்பினர், பிள்ளையவர்கள் படித்துப் பார்த்து உடனே யழைத்து அன்பு பாராட்டி, மறைசையந்தாதியிற் சில செய்யுள்களி னுரைகேட்டுச் சந்தோஷித்துத் தாமியற்றியிருந்த சில புத்தகங்களைக் கொடுத்து,

கலியாண சுந்தரவென் கண்மணியே நின்பால்
மலிவாகக் கல்வி வளரும்—பொலிவாகப்
பொற்புவியிற் கற்றோர் புகழச் சிவஞான
விற்பனனாய் வாழ்ந்திருக்க வே.

என வெழுதிக் கொடுத்தனர். 1875-ல் தமது தமையனார் உத்தியோகமாகவிருந்த செங்கற்பட்டிற்குப் போக நேரிட்டு, அவ்விடஞ் சென்று அவ்வூர் மிஷன் பாடசாலையில் படித்து வருகையில், இலக்கணக்கடல் தசாவதானம் பேறை - ஜெகநாதபிள்ளை யவர்களிடம் நன்னூல், இலக்கணவிளக்கம், நன்னூல் விருத்தியுரை, இலக்கணக்கொத்து முதலிய நூல்களைப்பாடங் கேட்டு அவதானமும் பழகினர். 1876 - ல் சென்னையிலிருந்து செங்கற்பட்டிற்குப் புகைவண்டி முதலில் விட்டபோது, தம்முடன் கற்கும் பிள்ளைகளதுபற்றி யொரு செய்யுள் பாடவேண்டுமென,

ஆயிரத் தெண்ணூற் றெழுபத் தாறு மாண்டணி செப்டெம்பர்
தூயமுற் றிகதி சுக்ரவாரந் தோன்றும் பதினோர் மணியதனில்
பாய வுலகிற் பலமாக்கள் பலனை யடையப் புகைவண்டி
நேய செங்கை நகரொன்று நிலத்து வந்து நிலவிற்றால்.

எனப் பாடியவுடன் தசாவதானியார்,

பாருங்க ளோர்நொடியிற் பன்னுமிடம் போய்வரலாம்
வாருங்க ளென்னதடை மாநிலத்தீர்—

என்றவுடன் இவர்,

நீருங்கள்
காலா ளடவாமல் காசுமிக நல்காமல்
மேலாக வாழவினி மேல்.

என முடித்தனர். இவரிப்போது இந்து தேசச் சரித்திரத்தையும், பினல் கோர்ட் சட்டத்தையும் முறையே 700, 500 விருத்தங்களாற் பாடிப் பாரதகண்டேதிகாசம், நீதிசாகரம் எனப் பெயரிட்டனர். 1877 - ல் செங்கற்பட்டுச் சுந்தரவிநாயகர் பதிகம், ஏகாம்பரேசர்பதிகம், காமாட்சியம்மன் பதிகம் பாடினர். 1878 - ல் திருக்கழுக்குன்றம் வேதமலை யடிவாரத்து மகாமண்டபத்தில் தசாவதானியார் முன்னிலையில் அவதானஞ் செய்தனர். அவ்வமயம் செங்கற்பட்டு வக்கீல், சுந்தரமுதலியார் புத்தகத்திற்கும் கரத்திற்கும் [illegible]லடை செப்புக வென,

முடித்தி றத்தலினால் மொய்ரேகை யேயுறலால்
நாடி யெவரு நண்ணுகையால்—கோடலினால்
வித்தகர்க ளேத்துகின்ற வேதகிரி தன்பதியில்
அத்தமது புத்தகமு மாம்.

எனப் பாடினர். சிவக்கொழுந்து பண்டாரமவர்கள் "பால்" என்னு மொழி பத்து வரும்படி பாடுகவென,

பற்றுங் கொடிக்ககனும் பங்கயனுங் காணவும்
பற்றே லுரித்தவனைப் பா*லேபால்—மற்றப்பால்
மாட்டுப்பால் பூப்பால் மரப்பால் வனிதையர்பா
லாட்டுப்பா லப்பாலிப் பால்.

என வியற்றினர். செய்யூர் ஜமீன்தார் தொடர்ந்தார் வைத்திய நாத முதலியார், நாடு என்று எடுத்து ஊர் என முடிக்கவேண்டுமென,

நாடுசே ரன்சோழ னற்பாண்டி யன்முதலோர்
தேடுபொருள் யாவுஞ் சிறக்குமா— வீடுதொண்டை
மண்டலத்திற் கோர்திலகன் வைத்தியநா தச்சீமா
னெண்டிறலோ டேவாழ்செய் யூர்.

என முடித்தனர். அவதானத்திற் குரிய மற்ற வங்கங்களெல்லா முடிந்த பின், தொடர்ந்தாரவர்கள் முதலியா ரவர்கட்குத் தங்க பரிசளிக்க உத்தேசித்த குறிப்புணர்ந்து,

காசுதனி லெற்குக் கவலையில்லை பொற்சரிகைத்
தூசுதனி லேதுந் துயரில்லை—வீசுபுக
ழீடுகட்டும் வள்ளா லியற்றுகவென் னாசிரியர்
வீடுகட்டி வாழ்ந்திட வே.

என்றவுடன் தொடர்ந்தாரவர்கள் தமது கிராமஞ் சென்று, வீடு கட்டுதற்கு வேண்டியபடி துண்டிட்ட பனைமரங் களையும், ஒரு பெருந் தொகையினையும் தசாவதானியாருக் கனுப்பிவைத்தனர். பின்னர் அத்தொடர்ந்தாரவர்கள் விருப்பத்தின்படி முதலியார் 5க்கழுக் குன்றம் திரிபுரசுந்தரிமாலை பாடியீந்தனர். சிலநாளைக்குப் பின் முதலியார் இடங்கழி நாட்டிற்குச் சென்றிருந்தபோது, தொடர்ந்தாரவர்கள் கேள்வியுற்று முதலியாரை யழைப்பித்துத் தக்க பரிசு கொடுக்க உத்தேசித்து அதற்கு வேண்டிய சௌகரியங் களையுஞ் சேகரித்துக்கொண்டு அழைத்து வரும்படி ஆளை யனுப்

* அன்னப்பால்—பரமசிவம்.

பினர். முதலியார் தொடர்ந்தாரவர்கள் கருத்தைத் தெரிந்து கொண்டு,

கண்டனைய செந்தமிழி லாயிரமா யிரமாகக் கவிகள் செய்வோன்
கவிவாணர் புவிவாணர் வியந்துபா ராட்டுறற் கலைகள் வல்லோன்
எண்டிசை யுஞ் சிவமணமே கமழ்வீசப் பிரசங்க மியற்று தீரன்
எவரேனும் பொற்குவியல் பரிசாக வீந்திடினு மேற்றி டாதோன்
தொன்மைமண் டலம்பூவைக் கலியாண சுந்தரனுந் தூய்விற் பன்னன்
துலக்கமுட னனுப்புமொரு கடிதமதைச் சூழ்ந்திங் கோர்க
கொண்டலிகர் சேயூர்வைத் தியச்சீமா னோதிலது குணத்திற் கேற்பக்
குலவியமித்திரமொன்றே வளர்பிறைபோ லென்பாலிற்குறித்தி டாயால்.

எனவொரு சீட்டுக்கவி யெழுதி ஆள்வசமனுப்பிச் சின்னாளைக்குப்பின் சேயூருக்கு வந்து, தொடர்ந்தாரவர்களுடன் ஒருவாரம் வரையி லிருந்து, செங்கற்பட்டினின்றுந் தசாவதானியாரை யழைப்பித்துத் தமக்குச் சேகரித்த பரிசுகளனைத்தையும் அவருக்குக் கொடுப்பித்தனர். 1879-ல் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகசுவாமிகள் மகா சந்நிதானத்தில் கமலபந்த மொன்றியற்றித் தரிசித்துப் பரிசு * பெற்று வந்தனர். இவ்வாதீனத்தில் இப்போது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகசுவாமிகள் மகாசந்நிதானத்தின் ஆசிர்வாதமும் பரிசும் அடிக்கடி பெற்று வருகின்றனர். 1879-ல் செங்கற் பட்டிலிருந்து திருப்போரூருக்குப் போய்க் கொண்டிருக்கையில் பிரணவமலைசலத்திற்கு மேற்கே யொரு குறுங்காட்டில் நல்ல சர்ப்ப மொன்று வலது காலின் சிறு விரலிற் கடித்து விட்டு எதிரிலே யிருந்து படமெடுத் தாடிக் கொண்டிருந்தது. அதனைக் கண்ட முதலியார் இனி யிறந்துபோதல் நிச்சயமெனத் தீர்மானித்துக்கொண்டு தாய்தந்தையரையு மறந்து திருப்போரூர், ஸ்ரீமத் சிவசங்கரத் தம்பிரான் சுவாமிகள்மீது இயற்றித் தாமெழுதுங் கொண்டுபோன கமலபந்த மடைத்துள்ள படத்தின் பின்புறத்தில் தம்பெயர் முதலிய வெழுதிக் கீழேவைத் துட்கார்ந்து கண்மூடித், திருமுருகாற்றுப்படையைப் பாராயணஞ் செய்யவாரம்பித்தனர். அவ்வமயம் ஒரு தொட்டியன் சமீபத்தில்வந்து பாம்பினைக் கண்டு நடந்த வரலாற்றை விசாரித்து, அப்பாம்பைத் துரத்தி யொரு மூலிகையைக் கொடுத்துச் சாப்பிடச்சொல்

* ஆதீனத்துப் பரிசினை மாத்திரம் அருட்பிரசாதமாகக்கொள்வர்.

வித் திருமுருகாற்றுப் படையினைச் சொல்லிக் கொண்டுபோ வென்றனன். முதலியார் இத்தொட்டியன் திருமுருகாற்றுப் படையென்னும் பிரபந்த மொன்றிருப்பதை எங்ஙனமறிவன் என நிதானித்து நோக்குகையில், தொட்டியனைக் காணாது அக்குறுங் காடு முழுவதுந் தேடியலைந்து அங்கிருந்தபடி,

சேரூரும் வீதிபல சூழ்ந்தொளிரு நல்லதிருப்
போரூரில் வந்த புனிதனே — காரூரும்
காட்டினிடை யின்று சடையேனை யாண்டதின்
றாட்டமதை யென்னென்பே னேன்.

அன்புருவா யேத்து மடியாரின் றீவினையாந்
துன்பகற்றும் போரூர் துரைவேளே — யின்பமுடன்
றொட்டியனைப் போலவின்று தோன்றிமறைந் திட்டவுன்
கட்டழகைக் கண்டதென் கண்.

வேட்டவரம் பெற்று விளங்கு முனாதடியர்
கூட்டமுறும் போரூர் குருமணியே — பாட்டினுக்குப்
பைத்தியங் கொண்டமுழு பாவலனென் றெண்ணினேன்
வைத்தியமு மேற்கொண்டாய் வந்து.

கூர்வாய்ந்த வேலாற் குலவசுரர் போரழித்த
சீர்வாழ்த்தும் போரூர் திகழ்வேளே — யோர்நல்ல
பாம்பு கடித்த படிவிடமேற் சேருமு
ளேம்பி காத்தா யுவந்து.

திருமுருகாற் றுப்படையைச் செப்புகசெல் லென்று
மொருதிருவாக் கென்மனதி லூன்றித் — தருவாக
வோங்கி வளர்ந்தியங் குயர்பலனைத் தந்தருளப்
பாங்களிப்பாய் போரூர் பரா.

கந்தா கடம்பா கருணை வடிவாளா
வெந்தாய் போரூ ரிறைவனே — விந்தையுற
விப்போதிங் காட்கொண்ட தெப்படியோ வப்படியே
யெப்போது மாட்கொ ளினிது.

என ஆறு செய்யுள்களைப் பாடிக்கொண்டே திருப்போரூ ரடைந்து அவ்வூர்த் தம்பிரான் சுவாமிகட்குத் தெரிவிக்க, அவரன்று சண்முகப் பெருமானுக்கு விசேஷ மகாபிஷேக முதலிய செய்து கொண்டாடினர். 1879-ல் முதலியாருக்கும் மேடவாக்கம், வெங்கடாசல முதலியார் குமாரத்தி சௌபாக்கியவதி பார்ப்பாத்தி

யம்மாளுக்கும் விவாகமகோற்சவம் நடந்தேறியது. அவ்வமயம், இப்போது திருப்போரூர்த் தம்பிரான் சுவாமிகளாயுள்ள, திருமழிசை வித்துவான் சிவப்பிரகாசையர் அவர்களால் திருமணமாலை பாடி யரங்கேற்றப்பட்டது. 1880 - ல் இவர் அருமைத் தந்தையார் சிவசாம்பிராச்சிய மடைந்தனர். இவ்வருடத்தில் இவர் இஞ்சினீயர் டிபார்ட்மென்டில் சூபர்வைசர் கிளர்க் உத்தியோகத்திலமர்ந்தனர். செங்கற்பட்டுக் கும்பாபிஷேக வோரடி கீர்த்தனம், செங்கற்பட்டுமகாத்மியம் இயற்றி யச்சிட்டனர். இவருக்குச் சிவஞானம் என்னும் பெண்குழந்தை பிறந்தது. 1881-ல் இவரைப் பரங்கிமலை இஞ்சினீயர் ஆபீசுக்கு மாற்றிவிட அவ்வூரில் பெரியபுராணப் பிரசங்க முதலிய செய்து வந்தனர். தமது மாணவகர், மந்திரசுக வைத்திய சிங்கம் நடராஜபண்டிதர் வேண்டுகோளினால் கடம்பன்கவசம் யந்திரத்துட னியற்றினர். சைதாப்பேட்டைக் காரணீசுரர் பதிகமும் பாடினர்.

1882 - ல் சென்னைக்கு வந்து தமது மைத்துனர் ஷாப்பில் சுதந்தர விருத்தியி லிருந்துகொண்டு, பலருக்குப் பாடஞ் சொல்லவாரம்பித்தனர். அனேக மாணவர்கள் இவரைச் சூழ்ந்தனர். பலவிடங்களிலும் பிரசங்க நடத்தினர். பல புத்தகங்களைப் பரிசோதித்து அச்சியற்றுவித்தனர். இவரெழுதிய பல பொது விஷயங்கள் பல பத்திரிகைகளையு மலங்கரித்தன. வேதோபநிடத சித்தாந்த மிருதி புராணேதிகாச நற்றுறை கலாசாகரத்திற் றிளைத்து, அடிக்கடி பலவிடங்களிற் சென்று புறச்சமயங்களைப் பூர்வபட்சஞ் செய்து, சுத்தாத்துவித சித்தாந்த வைதிகசைவ சமய வுண்மையினை வச்சிரலேபமாக நாட்டி மகோபந்நியாசஞ் செய்ய வாரம்பித்தனர். இவரை ஆங்கிலேயம் படித்தோர் Extemporanious Lecturer என்பர். இக்காலத்திலே இவருக்கு வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம் ஸ்ரீமத் சோமசுந்தர நாயகரவர்கள் ஆன்மார்த்த வாப்தராக விருந்தனர். மெய்கண்ட சாத்திரம் யாவருக்கும் போதிப்பாராயினர், விபூதி ருத்திராட்சதாரணம், பஞ்சாட்சரஜெபானம், சிவாலய வழிபாடு முதலியவற்றில் மிகுந்த ஊக்கத்தை யாவருக்கும் விளைவித்து வருவர். சென்னையில் நடராஜ சபை யொன்று தாபித்துப் பலவருடம் பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், வாதவூரர்புராணம், உபதேசகாண்டம், சிவரகசியம் தாயுமானவர்பாடல் முதலிய பிரசங்கித்து வந்தனர். இவர்பால்

படித்த மாணவர்க ளெண்ணிலர். இவருழைப்புக்கு எவ்வகையினுஞ் சிறிது மூதிய மெதிர்பார்ப்பவ ரல்லர். தமிழ்மணம் வீசும் தென்தேய முழுவதும் இவர் பெயர்மணமும் வீசியது. இவர் சாத்துகவி பெறாத புத்தகங்கள் மிக வருமை. இவரை யறியாத வித்துவான்க ளொருவரு மிலர். இவர்பால் படிக்கும் மாணவர்கட்குச் செய்யுள்பாடுஞ் சத்தியினை யெளிதி லுண்டாக்குவர். இவர்பால் அழுக்காறு கொண்டாருஞ் சிலருண்டு. இவரை வைதிக சமய கல்வியினி லெதிர்த்தாரை யிவரு மெதிர்ப்பர். புறங்கூறுவார்முன் மவுனமுறுவர். பெரும்பான்மையிற் சாந்த குணசீலரே. சிற்சில பிரபல தலங்களில் இவர்பாடிய கமலபந்தம், இரட்டைநாகபந்தம், அஷ்டநாகபந்தம், சிவலிங்கபந்த முதலிய சித்திரக்கவிகளை யென்றுங் காணலாம்.

முதலியாரவர்கள் சிதம்பரத்தில் ஸ்ரீ பாஸ்கர சேதுபதி மகாராஜா அவர்களைச் சந்தித்து வார்த்தை சொல்லிக் கொண்டிருக்கையில், சித்திரக்கவி சடாதர நாவலர் ஒருவர் வந்து இராஜாவைக் கண்டு தமது புலமையைக் கூற, அவர் "மெய்கண்டநாதன்" என இஷ்ட வுத்தரங் கொடுத்துச் சதுரங்க அஸ்வபந்தத்தில் பாடும்படி சொல்லிப் போஜனத்திற் கேகினர். நாவலரவர்கள் பெருமுயற்சிசெய்துஞ் செய்யுளமையாது வாளாவிருந்து, இராஜா அவர்கள் வந்தபின் மவுனமா யிருந்து விட்டனர். முதலியாரவர்கள்,

> மேவுமுய் யானனைஞ்சூழ் வெண்ணை நகரதனில்
> மாவுசித மேதாவி வந்தநாள்—மேவுதொடர்
> பொய்மதம் யாவும்புன் வன்னமுற வேசைவ
> மெய்மதம தானதே மெய்.

எனப்பாடி இராஜாவினிடங் கொடுக்க, அவர் வாங்கிச் சதுரங்க அஸ்வபந்தத்தி லடைத்துப்பார்த்து, நாவலரவர்களை மறுதினம் வந்து காணும்படி சொல்லி யனுப்பியபின், முதலியாரவர்கட்கு உயர்ந்த சால்வை யொன்று போர்த்தினர், முதலியார் இராஜாவினிடத்தில் விடைபெற்று வெளியில்வர, இவரை யெதிர்பார்த்துக்கொண்டிருந்த நாவலர் சந்தித்துத் தமது குறையைக் கூறி, இனி யிராஜாவைச் சந்தியாதபடி தீர்மானித்துள்ளே னென்ன, முதலியார் அவருக்கு அஸ்வகதி பந்தத்தின் இலக்கணங் கூறி, இராஜா அவர்கள் கொடுத்த சால்வையினை யவருக்குக் கொடுத்தனுப்பினர்.

இராஜா கேள்வியுற்று முதலியாரின் உதாரமதியை வியந்து பாராட்டினர். இவ்வருடம் தொண்டைமண்டலம் பாடசாலைக் கெதிரிலுள்ள கற்பகவிநாயகர் பதிகங்கள் இயற்றினர். 1883 - ல் முதலியாருக்குச் சிவபூஷணம் என்னும் குமாரன் பிறந்தனன். இவ்வருடத்தில் சிவராத்திரிபுராணவசனம் இயற்றி யச்சிட்டனர். 1884-ல் திருமுல்லைவாயல் மாசிலாமணியீசர்பதிகம், கொடியிடைநாயகிபதிகம், அஷ்டநாகபந்தம் வெளியிட்டனர். 1884-ல் மெய்கண்ட சாத்திரங்கள் படித்தற்கு அனுகூலமாகச் சித்தாந்தக்கட்டளை யியற்றினர். இந்நூலைத் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் வியந்து எழுதிய திருமுகத்தினையும் நூலினையும் ஷை யாதீனத்து வித்துவான் ஸ்ரீமத் சபாபதி நாவலரவர்கள் சென்னைக் காளத்திநாதர் சந்நிதியி லரங்கேற்றினர். யாழ்ப்பாணி யொருவர் விட்டுணுதூஷண பரிகாரம் என வொருநூ லச்சிட்டு வெளியிட, முதலியார் தமது மாணவகர் வண்ணக்களஞ்சியம் காஞ்சி நாகலிங்க முதலியாரைக்கொண்டு "விட்டுணுதூஷணபரிகார" நிக்கிரகமென இயற்றுவித்துக் கண்டித்தனர். ஷை யாழ்ப்பாணி முதலியாரவர்களைத் திருவாவடுதுறையிற் சந்தித்து விஷ்ணுமூர்த்தி சிவபெருமானுக்குச் சிவசத்தியெனச் சாதிக்க, முதலியார் ஸ்ரீமத் சபாபதி நாவலர், தம்பிரான்சுவாமிகள்பலர் முன்னிலையில் விஷ்ணுமூர்த்தி சிவபெருமானுக்குப் பரிக்கிரக சத்தியெனப் பல பிரமாணங்களைக்கொண்டு நிரூபிக்க, அவர் மவுனமுற் றேகினர். 1886 - ல் சிவநேசம் என்னும் பெண்குழந்தை முதலியாருக்குப் பிறந்தது. இவ்வருடத்தில் இராஜராஜேஸ்வரியின் பீஜமந்திரங்களை முதலாகக் கொண்டு மகா தேவிமந்திரமாலை பாடினர். காட்டாங் குளத்தூர்க் கும்பாபிஷேக காலத்தில் காளத்திநாதர்பதிகம் பாடி அரங்கேற்றினர். சென்னைச் சைனாபஜார் வீதியிலுள்ள கந்தசுவாமிப்பதிகம் பாடினர். சென்னையில் டிப்டி கலெக்டரொருவர் செய்த உபந்நியாசங்களிலும் அவர் வெளியிட்டதுண்டு பத்திரிகைகளிலும் சித்தாந்த முரண்க ளிருக்கக்கண்டு, Criticism on Dewan Bahadur R. Ragunatha Row's Lectures and Pamphlets என வெழுதி வெளியிட்டனர்.

அக்காலத்தில், சென்னையி லெழுந்தருளி யிருந்துவரும், முருகக்கடவுள் முதலிய தேவர்கட்கு ஐம்பதினாயிரம் கவிகள் பாடிய

வரும், வண்ணச்சரபம், அபார வருணகிரி எனக்கொண்டாடப் பெற்றவரும், முருகதாச சுவாமிகள், திருப்புகழ்ச் சுவாமிகள் எனவும் விளங்கிய ஸ்ரீமத் தண்டபாணி சுவாமிகள் ஏகபாதமும் நிரோஷ்டகமு மமைந்த ஏகத்தா ளிதழகலந்தாதி எனவொரு அரிய பிரபந்த மியற்றி யச்சிடுகையில், இந்நூலி னருமையினை யறியும் வித்துவா னொருவனைக் காண்பமோ வெனச் சிந்தித்துக் கொண் டிருக்கையில் முதலியார்,

தண்டக்கை யேந்த வியற்றிடந் தாதியைச் சாற்றரிதே
தண்டக்கை யேந்த வியற்றிடந் தாதியைச் சாற்றரிதே
தண்டக்கை யேந்த வியற்றிடந் தாதியைச் சாற்றரிதே
தண்டக்கை யேந்த வியற்றிடந் தாதியைச் சாற்றரிதே. *

எனப் பாடிச் சுவாமிகளிடங் கொடுக்க, அவர்கண்டு தமது நூலி னுக்கு அக்கவியைச் சாத்துகவியாக வமைத்து, தமது நூலின் பெருமையினை யறியும் வித்துவான்களு முளர் எனத் திருப்தி யடைந்து,

ஏகத்தா ளந்தாதி யின்பெருமை யறிபவரியா ரெனுங்க லக்கம்
போகத்தா னுயர்முனிவர் துதிகொள்செந் தமிழதனிற் புலமை வாய்ந்த
வேகத்தா லோர்கவியை யதுபோல வியற்றிட்டான் வேலோன் ஞானத்
தாகத்தான் கலியாண சுந்தரநற் சித்தாந்த சரப மாதோ.

எனப்பாடி யருளினர். அடுத்த வருடம் முதலியார் வளயனூரில் சண்முக சுவாமிகள் மடாலயத்தில், சிதம்பரம் ஸ்ரீமத் - பொன் னம்பல சுவாமிகள் விருப்பத்தின்படி பெரியபுராணத்தில் மெய்ப் பொரு ளயனார் சரித்திரத்தினைப் பிரசங்கிக்கும்போது மேற்படி ஸ்ரீமத் தண்டபாணி சுவாமிகள்,

தொண்டைமண் டலத்தொளிரும் பூவைநகர்க் குயையதனிற் சுகித்து வாழும்
தெண்டமிழ்தே ரவதானிக் கலியாண சுந்தரநற் சிங்க மின்று
தொண்டர்புரா ணச்சரித கர்ஜனையி னைச்செய்யத் துணுக்கெ திக்கெண்
டிசையு மிரிந்தனநாத் திகம்பேசு மதக்கரிக ளெக்க முற்றே.

எனவொரு கவியெழுதித் தந்தனர். 1890-ல் பூவாளூர்த்தலபுராண வசன மியற்றினர். திருத்துறையூ ராதீனம் ஸ்ரீலஸ்ரீ - சிதம்பரசிவப் பிரகாசபண்டார சந்நிதிகளைத் தரிசித்து ஆசிர்வாதமும் பரிசும் பெற் றனர். இன்று மடிக்கடி சென்று அங்ஙனமே பெற்று வருகின்றனர்.

---

* இச்செய்யுளினுள்ள அச்சிட்டுள்ள ஏகத்தா ளந்தாதியி லுளது.

தெலுங்கினின்றும் மொழிபெயர்த்துப் பொன்னேரியை யடுத்த **ஆண்டார்குப்பத் தலமான்மிய** மச்சிட்டனர். 1891 - ல் திருவரங்கக் கலம்பகத்தில் உள்ள சிவதூஷணங்க ளனைத்தையும் பூர்வபட்சம் பண்ணுவதற் கேதுவான பலகவிக ளடங்கிய **திருவொற்றியூர்க்கலம்பகம்** பாடினர். ஒருநாள் குஜிலிக்கடைக்குப் போய் வரும்போது தமது வெள்ளி விபூதிச்சம்புடம் தவறிவிட, ஸ்ரீ கந்தசுவாமி யாலயத்திற் சென்று,

> பூதியினுக் காலயமாம் பொற்சம்பு டந்தவறி
> வீதியினி லெங்கேயோ வீழ்ந்ததுநற்—சோதிமிகுங்
> கந்தகோட் டத்தமருங் காங்கேயா வக்கவலை
> சிந்தையினில் வாராமற் செய்.

எனப்பாடி வீட்டிற்கு வந்து, இரண்டொருநாள் கழித்துக் கிருத்திகையன்று அக்கோயிலுக்குப் போகையில், வழியி லொருவன் சந்தித்து அச்சம்புடத்தை விலைகூறினன். அவனுக்கு உண்மையினைத் தெரிவித்துப் பயமுறுத்தி எட்டணா கொடுத்து வாங்கிக் கொண்டனர். 1892-ல் மெய்கண்ட சாத்திரம் பதினான்கி லொன்றாகிய **நெஞ்சுவிடுதூதின்பதவுரை** இயற்றினர். இராமர் சிவலிங்க பூசையினை விளக்குவதற் கேதுவான **அனுமசந்தேசம்** இயற்றி யச்சிட்டனர். 1893-ல் கவித்தலம் துரைசாமி மூப்பனாரவர்கள் தாமியற்றிய புத்தகங்களைத் தமக்கனுப்ப, அவை யனைத்திலும் சிவதூஷணம் மலிந்திருக்கக் கண்டு,

> கவித்தலத்துத் துரைசாமி மூப்பனெனுஞ் சீமானே கழறக் கேண்மோ
> கருதரிய வேதோப நிடதங்க ளினுண்மை கவனியாது
> குவித்தனை நீ சிவதூட ணங்கள்பல வாயின்றிக் குறித்த வச்சில்
> குலவிடவே வெளியிட்ட புத்தகங்க ளனைத்தினிலுங் குறும னத்தர்
> செவிக்கினிய தாக்கொள்வ ராகையினு லவையனைத்துஞ் சிதறுண் டேகச்
> சிவமகிமை யினைநாட்டச் சித்தமா யிருக்கின்றேஞ் செம்மை வாய்ந்த
> புவிக்குளுயர் புலவர்சபை யினைக்கூட்டி யெமையழைக்கப் புந்தி கொள்ளின்
> புலமையினை வாய்ந்தநின் கல்வியினுக் கழகுண்டாம் புகழுண் டாமால்.

எனவெழுதி யனுப்பினர். அக்காலத்தில் அம்மூப்பனார் தேகசுக மில்லாதிருக்கின்றன ரெனவும், பின்னர் ஆலோசிக்கப்படுமெனவும் வேறொருவராற் கடிதங் கிடைத்தது. பின்பு யாதும் நடக்கவில்லை. எத்தகையரு மெளிதிற் பாடுவதற் கேதுவாக வசன நடையில் தெளிவாகச் **செய்யுளிலக்கண** மியற்றினர். இது அனேக

பதிப்புகளாகத் தமிழ்நாடு முழுவதும் பரவியது. பட்டுக்கோட்டை யடுத்த புன்னைச்சேரிச் செல்வவிநாயகர் பதிகம் பாடினர். ஸ்ரீமத் கோடகநல்லூர் சுந்தரசுவாமிகள் கட்டளையின்படி பாடியிருந்த உருத்திராக்கமாலையை யச்சிட்டனர். சிருங்கேரி ஸ்ரீ சங்கராசாரியர் மடத்தினரவர்களும், கூடலம்பட்டி ஸ்ரீ மணிகண்டசுவாமிகள் மடத்தினரவர்களும் சிலவிஷயங் கேட்டபோது, முதலியார் தமது மாணவர் செந்தமிழ்ப்பத்திரிகையர் வல்லை சண்முகசுந்தர முதலியாரைக்கொண்டு மாயாவாதியர்மயக்கமகற்றல் என்னு நூலி யற்றுவித்தனர். 1894-ல் திருவான்மியூர்ப்புராணம் என்னும் பெருங் காப்பியமாக ஆயிரத்துச் சில்லறை செய்யுள்களாலே பாடி யச்சிட்டனர். இதில் ஒருபால் சித்திரக்கவிகள் பலவாக இருக்கின்றன. பரங்கிமலையினை யடுத்த வேளச்சேரி யென்னும் வேதசிரேணிமான்மியம் வெளிப்படுத்தினர். அடுத்த வருஷத்தில், தமது முன்னோர்கள் தாபித்தபனை யோலையில் எழுதிப் போற்றிவந்த வாயிலார்நாயனர் வைபவத்தை வெளிப்படுத்தி, அதனுடன் ஒரு பதிகமும் பாடிச்சேர்த்தனர். தமது ஆசிரியர்க்கு அன்பராயிருந்த ஸ்ரீமத் யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதரவர்கள் அச்சிட்டு வெளியிட்ட திருக்கோவையார் உண்மை என்னும் அரியநூலின் கருத்தினை மறுத்து, யாழ்ப்பாணம் ஸ்ரீமத் அம்பலவாண நாவலரவர்கள் அச்சிட்ட சிவத்துரோககண்டனம் என்னு நூலைக் கண்டித்துச் சிவத்துரோககண்டன தூரீகரணம் பிரசுரித்தனர். 1897-ல் திருப்பாசூர் புராணவசனம் எழுதி யச்சிட்டனர். அடுத்த வருஷம் பாடியென வழங்கும் திருவலிதாயபுராணவசனம் இயற்றினர். இதன் மூன்றாம் பதிப்பு 28-பக்கங்களுடன் வெளிப்பட்டது. முதலியார் திருவிற்கோலமென்னும் கூவத்திற்குப் போய்ச் சுவாமி தரிசனஞ்செய்து வெளிவருகையில், அக்கோயிலில் ஒருபுறத்தில் வைத்த வெள்ளிப் பூண்கட்டிய தமது தடியொன்று காணாமற் போய்விட,

> சுந்தரர்க்குக் கோல்கொடுத்த சோதியே கல்யாண
> சுந்தரன்கோல் கொண்டதென்ன சூழ்ச்சியோ--விந்தைமிகும்
> விற்கோல மேவுந்து வீறுகழ லேப்பணிந்து
> தற்கோ பதிற்செய்தாய் சாற்று.

எனக்கூறி ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து புகைவண்டி யேறிச் சென்னைக்கு வருகையில், தமக்குச் சமீபத்திலிருந்த வொருவன்

கரத்தில் தமது தடியிருக்கக் கண்டு விசாரிக்க அவன் பயந்து கொடுத்து விட்டனன். உடனே,

கோலையுங் கேனெடுத்தாய் கொண்டுவந்திங் கேன்கொடுத்தாய்
வேலையிது தானோ விளம்பிடுக—பாலகிகர்
சொல்லார்தே விப்புகழும் தொல்திரிபு ராந்தகனே
யெல்லாநின் றன்விளையாட் டே.

எனப்பாடினார். 1900 - ல் திருப்பாலவன புராணவசன மியற்றினார். இவ்வருடத்தில் தமது புத்திரி சிவஞானாம்பிகைசாம்பிராச்சிய மடைந்தது. மாயாவாதி யொருவர் வெளியிட்ட ஸ்ரீபகவத்கீதா திராவிட மகாவியாக்கியானப் பெருநூலின் முகவுரையில் சிவாபசார மமைந்திருக்கக் கண்டு, தமது மாணவகர் வித்துவான் சின்னைய தங்கவேலு முதலியாரைக் கொண்டு முகவுரைமறுப்பு மொன்றியற்றுவித்தனர். 1901 - ல் திருக்கழுக்குன்றஞ் சென்று மலையின்மீதுபோக, அங்கொரு மண்டபத்தின் கருங்கற் சுவரில் நாலாயிரப் பிரபந்தச் செய்யுள் எழுதி யிருந்ததனைக் கண்டு, செங்கற்பட்டுச் சப்மேஜிஸ்ட்ரேட் கோதண்டராம பிள்ளையவர்கள் வெட்டுவித்ததாகத் தெரிந்து, அன்றிரவு அவ்வூர்த் திரிபுரசுந்தரியம்மன் ஆலயத்தி லொரு பிரசங்கஞ் செய்கையில், ஷை பிள்ளையவர்கள் இங்ஙனஞ் செய்தது முற்று மடாத காரிய மென்றும், ஒருகாலத்தில் வைஷ்ணவர்கள் தங்கள் மண்டப மென வாதாடுவதும் ஏதுவாகு மெனவும், அதனால் பெருங்கலகம் முண்டா மெனவுங்கூறி, சென்னைக்கு வந்து அச்செய்யுளை யொருவாரத்திற்குள் எடுத்துவிட வேண்டு மென்றும், இல்லையேல் இராஜாங்கத்திற்குத் தெரிவிக்கப்படு மெனவும் ஷை பிள்ளைக்குத் தெரிவிக்க, அவருடனே அச்செய்யுளை யெடுத்துவிட்டனர். இதுபோன்ற செய்யுள் திருப்போரூர் பிரணவமாசல மலையின்மீது மிருப்பதாகக் கேள்வி. அதனையும் அவ்வூர்த் தருமகர்த்தர் எடுத்து விடுவாரேல் மிக்க நலமாகும். இந்த வருடத்தில் தமது ஆசாரியத்து வார்த்தராகிய ஸ்ரீமத் சுவாமி வேதாசல மவர்களுடன் கலந்தாலோசித்துச் சென்னையில் மெய்கண்ட சந்தான சபை யொன்று தாபித்து அச்சபையில் மெய்கண்ட சிவாசாரியார், மாதவச்சிவஞான யோகிகள் குருபூஜை நடத்திவந்தனர். இச்சபை இப்போது சென்னை ஸ்ரீ அருணாசலேசுவரர் வசந்தமண்டபத்தில் நிலைபெற்றுள்ளது. அதில் அருணாசலேசுவரர் தமிழ்வேத பாடசாலை நடந்து

வருகிறது. இச்சபைக்குத் தலைவர் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகசுவாமிகளேயாம். இச்சபைக்கென முதலியார் மாணவர் காஞ்சி நாகலிங்கமுதலியார் முதலியோர் சேகரித்துச் சிவஞான முனிவரர் பெயரால் தாபித்த அரிய பெரிய புத்தகங்களடங்கிய நிலைக்கண்ணாடிபெட்டி யொன்று இப்போது சென்னைச் சிவனடியார்த் திருக்கூட்ட மண்டபத்தில் வைத்து, யாவரும் இலவசமாய்ப் படிக்கும்படி யேற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

1902 - ல் திருவொற்றியூரில் ஞானசமாதி கொண்டு கொலுவீற்றிருந் தருளும் தவராஜ சிங்கமாகிய பட்டினத்துச் சுவாமிகட்கு ஆடி யுத்திராடத்திரவிலும், மாசி மகிறடி யுற்சவத்திற் பகலிலும் திருவீதிமகோற்சவ முண்டாக்கினர். திருவொற்றியூரில் வடவண்டை மாடவீதியாக வட்டப்பாறை நாச்சியார் கோயிலுக் கெதிரே சுவாமி யிரவில் வருகையில், சில ஸ்மார்த்த பிராமணர்கள் தூண்டு கோலினு லொருவன் சுவாமியின்மீது கல்லெறிய முதலியார் கண்டு மிக மனம் புழுங்கி,

> ஓற்றியூ ரினிற்கம்ப னுயர்காருத் தன்சரித முசித மாகப்
> பெற்றிபெற வேயெழுதப் பேரருளிற் பந்தமது பிடித்து நின்ற
> வெற்றிசேர் காளிசீ வெண்காடர் வீதியினில் விளங்கித் தோன்ற
> விற்றைக்கிங் கிடையூறு செய்தானை யெமலோக மேற்ற னன்றே.

எனப்பாடினர். இரண்டொரு நாளில் வைவசுதன் தன்னுலகிற் கவனை யழைத்துக்கொண்டனன். அத்திருவிழாவினை இப்போது தேவகோட்டை நகரத்தினர் மிகச் சிறப்பாக நடத்தி வருகின்றனர். ஸ்ரீ சிதம்பர பரதேசி யொருவரைக் கொண்டு சுவாமிகள் அவதார க்ஷேத்திரமாகிய காவிரிப்பூம் பட்டினத்திலு முற்சவ நடப்பித்தனர். இவ்வரு முதல் முதலியார் மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் புலவர்களு ளொருவராய் விளங்கி வருகின்றனர். மெய்கண்ட சாத்திரம் பதினான்கின் உண்மையினை யாவரு மெளிதிலறிய செந்தமிழ் வசன நடையில் எது திருட்டாந்த பூர்வகமாகவும், ஆட்சேப சமாதானங்களுடனும், பரபட்சஞ் சுபட்சநிறைந்த சித்தாந்தவசனபூஷணம் எனுஞ் சாத்திர மொன் றியற்றினர். சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபாவிருபஃது, திருவருட்பயன் முதலிய ஆங்கிலேயத்தில் மொழிபெயர்த்து அச்சிட்டு மேற்றிசையிற் பரவச்செய்துவரும், தமது ஆன்

மார்த்த சோதரராகிய ஸ்ரீமத் - ஜெ - யம் - நல்லசாமிபிள்ளை பி-ஏ, பி-எல். அவர்கள் இச்சித்தாந்த வசனபூஷணத்தைத் தாம் வெளியிட்டுவந்த சித்தாந்த தீபிகையிலும் பிரசுரித்து வந்தனர். இவ்வருடத்தில் ஒருநாள் சென்னையி லிருந்து ரயிலேறி இரவு பதினொரு மணிக்கு மயிலம் ஸ்டேஷனி லிறங்கிக் கிருத்திகை தரிசனார்த்தமாக மாட்டுவண்டியி லேறிச் செல்லுகையில், வழியில் கரிய நெடிய பருத்த கோரரூபம் வாய்ந்த ஆளொருவன் தடித்த தடியுடன் குறுக்கிட்டு எதிரினின்றான். உடனே முதலியார் உருத்திராட்ச கண்டியும், பொன்மூக்குக் கண்ணாடியும், பீதாம்பரம் சால்வை முதலியவு மடங்கிய பெட்டியை அவனிடங் கொடுத்து உபசாரமாய அனுப்பிவிட்டுத் தாம் ஒரு வேட்டியுடன் திருமுருகாற்றுப்படை பாராயணஞ் செய்துகொண்டே, கால்மயில் தூரஞ் செல்லுகையில், அவன் சாக்குரலுடன் வழியில் குறுக்கே விழுந்து கிடந்தனன். முதலியார் வண்டியினின்று மிறங்கிப் பார்க்கத் தொண்டை பிளந்து இரத்தப் பிரவாகத்துடனே யிருக்கு நிலைதெரிந்து, அவன் சமீபத்திலிருந்த தனது பெட்டியை யெடுத்துக்கொண்டு சென்றனர். இதுபோலும் திருச்செந்தூர் வழியிலும் பழனி வழியிலும் ஆபத்து விளைய, ஆறுமுகச் சிவனார் திருமுகக் கருணையால் மீண்டதுண்டு. ஸ்ரீமத் சங்கராசாரியர், ஸ்ரீராமாநுஜாசாரியர், ஸ்ரீ மத்துவாசாரியர் முதலியோர் பகவத்கீதைக்கு இயற்றியுள்ள உரைகளனைத்தினையும் பூர்வபட்சமாக்கிச் சுத்தாத்துவித சித்தாந்த வுரையே பொருத்தமெனப் பல பிரமாணங்களைக் கொண்டுவிளக்கிப் **பகவத் கீதார்த்த பங்கம்** எனவொருநூலியற்றினர். சென்னை ஸ்ரீ கந்தசுவாமி யாலயத்தில் நடக்கும் வசந்த மகோற்சவ காலங்களில் ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானுக்குக் கிருஷ்ணவேஷம் போட்டு வரும் வழக்கத்தினைக் கண்ணுற்று, அவ்வாலயத்தில் ஒரு பெருஞ்சபை கூட்டிச் சண்முகப் பெருமானே பதிலட்சணங்கள் குறைவறநிறைந்து முழுமுதற் கடவுளென்பதனை விளக்கி, பலபலவிஷ்ட வடமொழிப் பிரமாணங்களையும், "சிவனெனவே தேவரையுஞ் சிந்தி சிவனை - யவரெனக்கண்டார் நிரயத்தார்." எனவும், "அரையரெனக் காண்ப ரமைச்செ யமைச்சா - வரையனைக் கண்டாற் றுயரமாம்" எனவும் வரும் தென்மொழிப் பிரமாணங்களையும் காட்டி ஒரு மகோபந்நியாசஞ் செய்து, **அசம்பிரதா யோற்சவ**

நிரசனம் எனும் பத்திரிகை வெளியிட்டு அவ்வழக்கத்தை மாற்றினர். 1903-ல் சென்னையில் இராமாயணப் பிரசங்கத்தில் சாஸ்திரியா ரொருவர் தட்சயாகத்திற்கு விஷ்ணுமூர்த்தி வந்ததில்லையென வற்புறுத்திக் கூறினர். முதலியார் கேள்வியுற்றுத் தட்சயாகத்திற்கு விஷ்ணு மூர்த்தி வந்தனரென்றும் வீரபத்திர மூர்த்தியால் தலையிழந்து பரிபவமடைந்தாரென்றும், பின்னர்ச் சிவபெருமானால் அனுக்கிரகிக்கப் பட்டன ரென்றும் பல வடமொழி பலிஷ்டப் பிரமாணங்களைக்காட்டி, தட்சயாகப் பிரசங்க விபரீதம் எனும் பத்திரிகை தமது மாணவர் பூவை [illegible] ரத்நம் - திருநாவுக்கரசு முதலியாரைக்கொண்டு [illegible] அச்சிட்டு வெளியிட்டனர். 1904-ல் திருவிடைமருதூர் சென்று துறைசை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருக்கடைக் கணிப்பால் தென்மொழி சிவஞானபோத மாபாடியம் பயின்றனர். பின்னர், சூரியனார் கோயில் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரதேசிக சுவாமிகள் மகாசந்நிதானத்தில் சித்தாந்தத்தில் தமக்கிருந்த அரிய சந்தேகங்களை நிவர்த்திசெய்து கொண்டனர். சித்தாந்த சாதனக் கட்டளை யியற்றினர். வடமொழியிலுள்ள நாடக விலக்கணம், சந்தவிலக்கணம், ஜாதிகளிலக்கணம், நாயகர்கள் பேதம், நாயகிகள் பேதம், சம்போகவிப் பிரலம்பக்கூற்று, தசாவஸ்தை தரிசனை முதலிய வற்றிற்கு இலக்கியமாகப் பூவைச் சிங்கார சதகம் இயற்றினர். திருவேற்காட்டுத் தலபுராண வசனம், பஞ்சேஷ்டித் தலபுராண வசன மியற்றி யச்சிட்டனர். 1905-ல் முதலியார் [illegible] சுந்தரவடிவு முதலியாருக்குச் சஷ்டிபூர்த்தி நிறைவேறியது. தமது புத்திரருக்கும் விவாகம் நடந்தேறியது. சித்தாந்த தசகாரியக்கட்டளை வெளியிட்டனர். 1906-ல் பதின்மூன்று வைத்திய சாத்திரங்களும், தொண்ணூறு தோத்திர பதிகங்களும் பாடியவரும், அறுபத்தாறு வித்துவான்களால் பாராட்டப் பெற்றவருமாகிய ஸ்ரீ ஞானசித்த சுவாமிகள் சரித்திரத்தை ஞானசித்தப் பிரபாவம் என வொருநூலியற்றினர். குன்றத்தூரில் தெய்வச் சேக்கிழாரை அவர் திருநட்சத்திரத் தன்று யானைவாகனத்தின்மேல் எழுந்தருளச்செய்து திருவீதி மகோற்சவம் செய்வித்து,

பெந்தமெலாம் போக்கும் பெரியபுரா ணந்தந்த
வெந்தைபிரான் சேக்கிழா ரிவ்வுலகில்—வந்திலரேல்
நாயன்மார் கீர்த்தியெங்கே நல்லதமிழ் வேதமெங்கே
தூயசிவ பத்தியெங்கே சொல்.

எனப்பாடிக் கொண்டாடினர். அதுமுதல் அவருக்குச் சென்னையில் ஒருசபையார் மகோற்சவம் நடத்திவருகின்றனர். அடுத்த வருடத்தில்சேக்கிழார் சுவாமிகள் சரித்திரம் இயற்றினார். இவ்வருடம் ஸ்ரீமத் சுவாமி வேதாசல மவர்கள் தாபித்த சைவ சித்தாந்த மகா சமாஜத்தில் முக்கிய அங்கத்தினரா யிருந்து வருகின்றனர். 1906-ல் முதலியாருக்குத் திருச்சிற்றம்பலம் என்னும் பௌத்திரன் பிறந்தனன். வெங்களூர்க் கணேச சாஸ்திரியார் திருவாமாத்தூரில் தேவாரத் திருமுறைகட்குத் தமிழ் வேதமெனல் கூடாதெனவும், தமிழ்மொழி சிறந்த தன்றெனவும் பிரசங்கிக்கக் கேட்டு, முதலியார் அவ்வூர்ச் சென்று ஆலயத்தி லிரண்டு பிரசங்கம் செய்து, நால்வர் திருமுறைகளே வேதமெனவும், தமிழ் அநாதியி லுலக நிறைந்த கடலன்ன அரிய மொழி யெனவும், இதற்கிணையான மொழி யிலையெனவும் பிரசங்கித்துச் சென்னைக்கு வந்துவிட்டனர். சாஸ்திரியார் கேள்வியுற்றுத் தமது கொள்கையை நிறுத்த, அனேக பிராமணர்களைக் கூட்டி விருப்பாக்ஷ ஆலயத்தில் பிரசங்கஞ்செய்ய வாரம்பித்த சபையில், முதலியார் நேரே சென்று எதிரிலுட்கார்ந்தவுடன், சாஸ்திரியார் அங்ஙனஞ் சொல்லவில்லையென்று கூறிவிட்டுத் தேவாரத் தோத்திரஞ்செய்து திரும்பினார். பூவிருந்த வல்லியை யடுத்த பாரிவாக்கத்துப் டாலீசர் பதிகம் பாடினர். 1907-ல் வேதம்? வேதாந்தம், வேதாந்தசாரம் அல்லது சித்தாந்தம் ஆக மூன்றினை மடங்கிய விஷயங்களை நன்கு பகுத்து விளக்கி ஆன்மாக்கள் இன்றியமையாது கடைபிடிக்கற் குரிய உண்மையைக் காட்டுஞ் சாத்திர மிஃதென்னச் சித்தாந்தம் எனு நூலியற்றினார். வைதிக சைவர்கள் தங்கள் கடமைகடங்களை இன்றுமைக் கொண்டே நடத்த வேண்டுமென்பதை விளக்கச் சைவக் கிரியாதிகாரம் என வொருநூல் தமது மாணவர்கள் வேண்டுகோள்படி சாஞ்சலய சுவாமிகளைக்கொண்டு இயற்றுவித்தனர். இவ்வருடத்தில் தமது தமையனார் சிவசாயுச்சிய முற்றனர். இவருக்குக் குமாரர்கள் சிவாநந்தமுதலியார், சொக்கலிங்க முதலியார், சிவானந்த முதலியார் என மூவர். இவருள் இரண்டாம் புத்திரர் 1912-ல் சிவபதம் அடைந்தனர். 1908-ல் தமது புத்திரர் சிவசாயுச்சிய மெய்தினர். தமது ஒரே ஆண்மைப் புத்திரனா யிருந்ததால் மிக மனங்கலங்குமாறாயினர். பலவிதத்தில் பார்த்தவர்க்கு முற்றுமாறுதல், இன்பமும் துன்பமும் முன்வினை யாலேயாம் தா

கலின் அதுபற்றி மகிழ்தலும் கவறலும் அறிவின்மை யென வுன்னி, "காய்ந்துளோர்களுங் காய்ப்பரோ மக்கண்மேற்காதல்" என்ற வாக்கினைப் பூர்வபட்சமாக்கி "இல்லாருஞ் சுற்றமுமைந் தரும் வாழ்வு மெழிலுடம்பு மெல்லாம் வெளிமயக்கே" எனுந் திருவாக்கின் அனுபவியாய், "கற்கக் கசடறக் கற்பவை கற்றபி-னிற்க வதற்குத்தக" எனும் போத பரிபாலனராய் இருந்தன ரென்பது பலருங்கும் பிரத்தியட்சம். இங்ஙன மிவருக்கு உறுதி வாய்ந்தது சித்தாந்த வாராய்ச்சியி னநுபவம் போலும். 1909-ல் எந்நூ லமைப்பிற்கு மேதுவாக நிற்குந் தருக்கநூல் தமிழ்மொழி யிற் சிலவே யன்றிப் பலவில்லை யாகலானும், அன்னவும் எளிதிற் பயன்படுவனவல்ல வாகலானும், யாவருஞ் சுலபமாகத் தேறச் சித்தாந்த வைதிக நூல்களுக்கு முறணுகா வண்ணம் சித்தாந்த பரி பாஷை யென்னுந் தருக்க சோபானம் எனு நூலியற்றினர். இதில் ஆங்காங்குக் காணப்படும் வடமொழிச் சங்கேத பதங்கட்குத் தமிழ்மொழியானும், ஆங்கிலேய மொழியானும் பிரதி பதங்க ளும் பலகாட்டப்பட்டுள்ளன. தக்கோலமென வழங்கும் ஊரற் றல புராணவசன மியற்றினர். திருவொற்றியூரி லெழுந்தருளி யிருக்கும் உபயசம்புவிற்கு நந்தீசுவரர்வைபவம் எழுதினர். சில வருடங்கட்கு முந்திச் சஞ்சிகை ரூபமாக வாரம்பித்த தாயுமான வர் பாடல் மெய்கண்ட விருத்தியுரை இவ்வருடம் பூர்த்தியா யிற்று. முதலியார் தென்னேரி இராமசாமி முதலியாருடன் வார் த்தைசொல்லிக் கொண்டிருந்தபோது நாமம் இடுவதற்கு வேதத் தில் பிரமாண மில்லையென, தென்னேரியார் தமக்கு வேண் டிய ஐயங்காரவர்களை விசாரித்துப் பிரமாணங் காட்டுவதாகவும், அங்ஙனம் காட்டாவிடில் தாம் விபூதி தரித்துக்கொள்வதாகவும் சொல்லிப் பற்பலரிடம் தேடி விசாரிக்கப் பலிக்காமற்போக மௌன முற்றனர். அவருண்மை தேறவே முதலியார் வேதங்களிலும், உபநிடதங்களிலும், புராணங்களிலும், இராமாயணத்திலும், பார தத்திலும், நாலாயிரப் பிரபந்தத்திலும் சித்திர புண்டரமாகிய நாம த்தினைப் பற்றி யோரெழுத்து மிலையென வேதவேதாந்த புண்டர விசாரம் என வொருநூல் தமது மாணவகர் மெய்கண்ட சரணா லய சுவாமிகளைக் கொண்டு வெளியிட்டனர். அதனைக்கண்ட ஐயங்காரொருவர் மனம் பொறாராய் குழகுழ வழவழவெனப் பிரமாணங்காட்டி வேதவேதாந்த புண்டர விசாரதீபம் எனு

நூல் வெளியிட்டனர். அடுத்த வாரமே முதலியார் தமது மாணவர் நெல்லைச் சுப்பிரமணிய சுவாமிகளைக்கொண்டு வேறு வேதாந்த புண்டர விசாரதீப சண்டமாருதம் என வெளிப்படுத்திப் பூர்வபட்சியை மவுனமுறச் செய்தனர். 1910-ல் முதலியார் ஆண்டார் குப்பத்து ஸ்ரீபால சுப்பிரமணிய சுவாமி தரிசனார்த்தமாகச் சென்றபோது, அந்நாள் மாலை ஐந்து மணிக்கு அவ்வூர் பாலநதியில் முழுகுங்கால் ஜலத்தில் தமது ஸ்பான் மூக்குக் கண்ணாடி விழுந்துவிட, வெகுநேரம் தேடியும் பலரைக் கொண்டாராய்ந்தும் காணாது திரும்பி,

*வாக்குக்கு வல்லசெந் தமிழ்வாணர் நாவுறை மகிழ வைத்தோர்*
*நோக்குக்கு முன்தோன்றி நற்கருணை பாலிக்கு நதிவேற் சேயே*
*பாக்குக்கென் றுயர்சோலை யடர்பால நதியின்று பறித்த வென்றன்*
*மூக்குக்கண் ணாடியையெங் ஙனம்பெறுவே னுருகுஞ்சி முன்னூ வாயால்.*

எனச் சந்நிதியி லேபாடி, மறுநாள் தாமே பஞ்சாலய ப்ரமஸ்ரீ விசுவநாத குருக்களும் சென்னையை நோக்கி வருகையில், முதல் நாள் கண்ணாடி விழுந்த இடத்திலே குருக்களுக்குத் தெரியவிட்டு, அவர் சந்தோஷத்துடன் சென்று, அந்நதியில் இறங்கினவுடன் காலில் கண்ணாடி சிக்குவதை எடுத்துவந்து தந்தனர். திருவொற்றியூரினின்று வடக்கே யுள்ள சிந்தாமணித் தலபுராண வசன மியற்றினர். சென்னையிலுள்ள பொதுச் சைவர்கட்கு உபயோகமாகும்படி இலௌகீக போஜனவிதி யொன்றெழுதினார். 1911-ல் திருவெவ்வளூரையடுத்த இராமபுரி தோத்திரமாலை இயற்றினர். இவ்வருடம் தமது அருமைத்தாயார் சுப்புறு மலையம்மாள் பரிபூரணமாயினமையின், கருங்கல் மனமும் கசிந்துருகக் கையறுநிலை பாடினர். தமிழிலும் தெலுங்கிலுமுள்ள சரிதங்களை ஒப்புநோக்கிச் செய்துக் காளத்திபுராணவசன மியற்றினர். திருவொற்றியூர்த்தலபுராண வசனம் இயற்றி வெளிப்படுத்தினர். பொன்னேரிக்கு வடபுறத்துள்ள அரிய துறை புராணவசனம் எழுதினர். இவ்வருடம் ... புரம் பொம்மைய பாளையம் சிவாசாரிய சந்தானம் ஸ்ரீலஸ்ரீ ... தேசிக சுவாமிகள் பாலசங்கிரகம் தரிசனமடைந்து ஆசாரி பெற்று வருகின்றனர்.

1912-ல் பாம்பனைக் குமரகுருதாச சுவாமிகள் பாடத்திரட்டியடியார்க்கு, அவர் புலம்பலுக்கும், பத்திரம் பெற்றார் புலம்பலுக்கும் ஞானார்த்தீபவுரை எழுதி வெளியிட்டனர். சைவசித்தாந்த மகாசமாஜத்தில்

மாதாந்தரப் பிரசுரமாகிய "சித்தாந்தம்" என்பதற்குக் கைம்மாறு கருதாக்கருணையுடன் பத்திராசிரிய ராயினர். இப்பத்திரிகையில் தமிழ்நாட்டு வைதிக சைவ பாரங்கதர்கள் பலர் அரிய நுண்ணிய பெரிய விஷயங்களை யெழுதி வருகின்றனர். முதலியார் இதுகாறு மிப்பத்திரிகையி லெழுதிய வற்றுள், சில உபநிடத மொழிபெயர்ப்பு, மகாவாக்கியார்த்தம், துரிய மூர்த்தி நிர்ணயம், அத்துவிதப் பொருள் முதலிய கவனிக்கத்தக்கன. தமது வடமொழிப் பெயரை "மணவழகு" எனத்தமிழ் மொழியாக வழங்கிவருவாராயினர். 1913-ல் சென்னைத் தேவஸ்தான கமிட்டியாரால் ஸ்ரீ அருணாசலேச்சுரராலயத்திற்கு டிரஸ்டிகளி லொருவராக நியமிக்கப் பெற்றனர். முதலியார் தாய் தந்தையரின் பெயர்கள் அம்பாளுக்கும் சுவாமிக்கு மமைந்திருக்கும் இவ்வாலயத் திருத்தொண்டு இவருக்குக் கிடைத்திருப்பது வியப்பே. முதலியார் பிறதேசங்களி லடிக்கடி சென்று பற்பல சைவசபைகளில் அக்கிராசனம் வகித்து, வைதிக சைவசமய உண்மையினை விளக்கி வருகின்றனர். சித்தாந்த பரிமளம், சித்தாந்தவகராதி எழுதி வருகின்றனர். அவை விரைவில் வெளிவரும். முதலியாருக்கு 1914-ல் ஆனந்த வருடம் சித்திரை மாதம் 26உ சுக்கிரவாரம் சித்திரை நட்சத்திரத்தன்று சஷ்டி பூர்த்திமங்களமகோற்சவம் அறுமுகச்சிவனார் திருவருட் பிரசாதத்தால் சுபமாக நிறைவேறியது.

முதலியாருக்குத் தற்காலம் பரிவுடன் நெருங்கிய சுற்றத்தினர், முற்குறித்த தமையனார் நால்வர். தமையனார் புத்திரர்கள் சிவபாதமுதலியார், சிவானந்தமுதலியார் இருவர். இளைய தமது தங்கை புத்திரர்கள் சம்பந்த மூர்த்தி முதலியார், சிதம்பரநாத முதலியார் இருவர். புத்திரி சிவபோக அம்மையார். அவர் கணவனார் - தே - சாமிநாத முதலியாரும். பௌத்திரர் கடாக்ஷன், திருச்சிற்றம்பலம்.

முதலியாரிடத்து இதுகாறும் படித்த மாணவர்கள் பன்னிலர்கள். நற்புலமை வாய்ந்தோர் 36. இவருட் சிலர் துறந்தோர். பதிகங்கள் நீங்கலாக வியற்றிய நூல்கள் 40. பரிசோதித்து அச்சிட்ட நூல்கள் 96. அவ்வவ்வமயங்களிற் பாடிய சாத்துகவி முதலியன 864.

இக்காலத்துத் தமிழ்ப் புலவருள் பெரும்பாலோர் தம்மையே ஓம்புத லொன்றுமே செய்து, கல்வியறிவுப் பெரும் பயன் கொள்

ளாது வாளா காலங்கழித் திடுபவர். அவர் பொன்னும், இவர் பொருட் [illegible] செல்வத்தை யொரு பொருட்டாக மதியாது, அருட் செல்வமொ ன்றினையே நாடிக் கல்வி யென்னும் நற்பொருட் [illegible] குலத்தினையும், தந்தேச நன்மையினையும் பேணி, தம் மாணாக்கர் கட்குக் கல்வி கற்பித்தல், [illegible] செய்து கல்வி யறிவின் பெருஞ் [illegible] செல்வராய் வாழ்ந்துவருபவர் [illegible] மெதிர் பாராது, [illegible] முறியின்றிச் [illegible] னைப் பரிபாலனஞ் செய்து வரும், [illegible] செழுந்தமிழ்த் [illegible] யாராயினும், [illegible] ரமாக வுழைத்து வரும் [illegible] சித்தாந்த [illegible] தானம் பூவை கலியாணசுந்தர முதலியாரவர்கள் [illegible] மனைவியாருடன் தீர்க்காயுளும் [illegible] வாழ, அம்பலவாணராகிய [illegible] ஸ்ரீ நடராஜப்பெருமான் [illegible] மொழிமெய்களால் சிந்தித்து வாழ்த்து வணங்குகின்றேம். [illegible]

வாழ்ககண் டிகையில் பூதி வாழ்கவைம் பெழுத்தாய் வார்த்தை
வாழ்கவச் சாதனத்தர் வாழ்கவை திகழ்சைவம்
வாழ்கசெந் தமிழ்நா வியாவும் வாழ்கபா வலர்க ளியாரும்
வாழ்கவெங் குருநா தன்றன் வாழ்க்கைமா துவ்வு மாதோ.

சென்னபட்டணம்.
8—5—1914.

ஸ்ரீ மணவழகின் மணாளவர்கள்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

# குருதோத்திரம்

செந்தமிழ்ப்பிரசங்கத்துரந்தரம்

வல்லை - சண்முகசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றிய

## நவமணிமாலை

வெண்பா

கண்ணூன் றுடையான் கலியாண சுந்தரப்பேர்
மண்மீது தாங்கி வடிவெடுத்துத்—தன்னையரியா
லென்றனக்குக் கல்வி யியையும் படியருளிப்
பந்தமறுத் தாண்டான் பரிந்து.

பரிந்தென்னை யாளப் பரசிவ மாகும் பரம்பொருளோ
தெரிந்திங்குத் தோன்றிநல் லத்து விதவுண்மை தேக்கவருட்
சொரிந்தெனக் கென்றுஞ் சுகத்தை யளிக்கச் சுருங்குறிவை
விரிந்திடச் செய்தவென் றேசிகன் பாதம் விழுமியதே.

கய

விழுமியநல் லறுசுவையா முணவதனை வாயூட்டி விபுத ரெங்குங்
குழுமியபே ரவையேறுந் திறமையையுஞ் சிற்பரன்றன் குரைகழற்கால்
தொழுமடியர் பத்தியையும் விரித்தெனக்குச் செவியூட்டிச் சோர்வி லாமல்
தழுவியதென் ஞரியனுங் கலியாண சுந்தரன்றன் றன்மை யாமால்.

### கலிவிருத்தம்

தன்மை யாளுந் தனிப்பெருங் கீர்த்தியைக்
கன்ம னத்த னுக்குமே காட்டினன்
சொன்ம யத்தன் கலியாண சுந்தரன்
என்ம னத்து ளிருப்பனெந் நாளுமே.

### கோச்சகம்

இரும்பெண்ணெ யக்கினியோ டெழுநாயி றேபோல
வருமன்பு றுணமான வள்ளலினை யுள்ளாது
துரும்பன்ன புறச்சமயத் துகளறுக்குஞ் சித்தார்த்தப்
பெருஞ்சரபங் கலியாண சுந்தரனெம் பெற்றியனே.

### கலிப்பா

பெற்ற மூரும் பிரானடி நாடொறும் பேணி நிற்கும் பெருந்தகை யாளனும்
உற்ற மேன்மை யுரைத்திட வொண்ணுமோ வும்பரேத்துமுயர்நெறிவாய்புரை
யற்ற மேலெட் டவதானி யானவ னருமை யாம்பூவை யார்ந்த நகருளான்
சுற்ற ருந்தவர் சூழுங் கலியாண சுந்த ரன்னடி சூடுமென் முடி.

### சந்தக்கலிவிருத்தம்

எந்நா யகனே யிமையோர் தலைவா
பொன்னா யகனும் பூநா யகனும்
இன்ன மறியா விறைவா வெங்கள்
மன்னா ரியன்பால் மகிழ்வாய் நிதமே.

### கழிநெடில்விருத்தம்

எட்டாங்கு நெய்யதுபோ லிலங்கியசுத் தாத்துவித வின்ப மீந்தோன்
னுட்டாங்கு மிருளொழித்துப் புன்சமயர் படக்கிலெலினை யுலையா தாண்ட
அட்டாவ தானியெனுங் கலியாண சுந்தரனெம் மாரியன்றன்
மட்டாரு முளரியடி யகத்தடத்தில் மலர்த்திமிக வணங்கி வாழ்வாம்.

### பன்னிருசீர்விருத்தம்

வாழ்மதி கலையென்ன வெண்ணீ றணிந்தநுதல் வைதிகத் திருவழகுடன்
வள்ளறிரு கண்மணி வயங்குகண் டத்தழகும் வைவேல் பிடித்தகையான்
பேழ்வயிற் றானையைக்கண்டுமேபயந்தொருபெருமைபெறுவள்ளியம்மை[ளும்
பெற்றிபெறுதெய்வமகளிருவருடன்மஞ்ஞையும்பெருகியொளிர் மார்பினழ
தாழ்வின்றி யெவரையு நோக்குநற் றன்மையுந் தமிழ்மறைபிடித்தொளிசெயச்
சன்மார்க்க நெறிகாட்டு சின்முத்தி ரைகொண்ட தாமரைக் கையினழகும்
காழ்த்தகற் பகமென்ன வென்முடியி லேயிலகுங் காற்கமல மலரினழகும்
கண்டுதொழு பேரருளடைந்திட்ட பாக்கியங் கனமாக வென்கண்ணதே.

# குருஸ்தோத்திரம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்துவித்துவான்

வண்ணாங்குளம்பியம்

காஞ்சி - நாகலிங்கமுதலியாரவர்கள்

இயற்றிய

## அஷ்டகம்

நுதலதனிற் பூதிசந் தனப்பொட்டுங் கண்டத்தி லுருண்மை வாய்ந்த
முதல்வன்விழித் தாழ்வடமு மடியதனிற் சப்பாடு முள்ள நத்தில்
விதம்விதமா வியதடியு மிடையதனில் வெண்கலையும் விளங்க நின்ற
விதமுலவு நற்சைவ சிகாமணியா மணவழகே நின்றாள் போற்றி.

சாந்தமுக மினியமொழி புன்சிரிப்பு மனக்கிலேசந் தவிராத் தோன்றாப்
போந்தமா னவர்பலர்க்கும் பன்னூல்க ளினையுரைக்கும் புகழை நாளும்
ஏய்ந்தநின் கருணையினைச் சென்னைமா நகரெங்கு மியம்பும் ஞான
வேந்தனென வேயொளிரு மணவழகே நின்கீர்த்தி விளம்பற் பாற்றே.

ஆயிரநா விருந்துமோர் கவியேனும் பாடாத வாதி சேடன்
வாயிலுன் கவிகளினை யாயிரமா யிரங்கேட்டு மனம்பு ழுங்கிக்
காயமுக்கா றேயடைந்து மண்ணினிற்கீ ழேமறைந்து காதமுறுல்
தூயமண வழகேநின் புலமையினை யென்னவெனத் துதிப்பே னுனே.

வாரிலகு மிலக்குமியே நின்னையொரு பொருட்டாக மதித்தி டாது
தாரிலகு வாணியினை நேசித்து மிகுபுலமை தமிழில் வாய்ந்த
சீரிலகு சித்தாந்த சரபமெனுங் கோமாற்குச் செல்வ மீய
ஏரிலகு மவன்பக்க லியலிய வணைந்திருந்த வென்னே யென்னே.

ஏதிலர்க ளாயெண்ணிக் கற்றுரை விரோதிக்கு மெழிற்பொன் மாதே
பூதிக்குப் பயந்தாயோ கண்மணிக்குப் பயந்தாயோ புனித மாக
நீதிவழி செபிக்கின்ற வைம்மொழிக்குப் பயந்தாயோ நிமல னுனை
ஆதிபர னடிபணியு மணவழகின் மேனியிலே யமர்ந்த தென்னே.

பித்தாந்த முக்கூற்றுப் புறச்சமயர் பிணக்கனைத்தும் பெரிது மோக
முத்தாந்த மின்னதெனச் சுத்தாத்து விதவுண்மை முன்னர்க் காட்டும்
சித்தாந்த சரபமெனுங் கலியாண சுந்தரவென் சிறுமை நீக்கி
வைத்தாண்ட நினதுழுவ லன்பதனை யேயெண்ணி வாழ்த்து வேனால்.

செந்தமிழி லக்கியவி லக்கணநூற் பற்பலவுஞ் செவ்வே யெற்கு
விந்தையுறப் போதித்தெங் கென்னையுமோர் கவிஞனென விளக்கி வைத்த
எந்தைநிக ரவதானி கலியாண சுந்தரனல் லெழிற்கோ மானைச்
சிந்தையினி லெந்நாளு மறவாம லேவைத்துத் தியானிப் பேனால்.

மறைசிவா கமமுணர்ந்து மெய்த்தவத்தி லேவாழ்ந்து மதிக்குஞ் சைவ
முறைமையினி லேயொழுகுங் கலியாண சுந்தரனென் முனிவ ரற்கு
நிறையறுபான் மணத்துமகோற் சவமதுதான் மங்களமாய் நிறைவே றிற்றால்
இறைவனரு ளாலின்னம் பல்லாண்டிங் கவர்வாழ்க விருநி லத்தே.

செம்பியங் கிராம முனிசீப்

பண்டிதரத்தினம்

புலவர் - திருநாவுக்கரசு முதலியாரவர்கள்

இயற்றிய

ஒருபாவொருபஃது

தெள்ளமுத மேயென்னச் செந்தமிழிற் பாடச் செறிமா முதுக்கர்
உள்ளகருத் துணர்ந்தவர்பா லுயர்புலமை யிலையெனிறுத்துப் போக்குங் கல்வி
வள்ளலென மதிநுவையை யட்டாவ தானியென வயங்கா நின்ற
எள்ளலிலாக் கலியாண சுந்தரனின் முனிபுகழை யேத்து வோம்.

வாராத பேரில்லை வைதிகருஞ் சைவர்களும் வல்லமை கண்டு
நேராத பேரில்லை நினைத்தாட் பிலைவிரும்பி நிலைக்க நாளும்
ஓராத பேரில்லை யுன்றனுடைய புகழ்தனை யுன்னிப் பாரில்
தீராத சீர்படைத்த கலியாண சுந்தரனின் திறமை யென்னே.

என்னுரைக்கே னென்னுரைக்கே னுன்றனுடைய கீர்த்தியினை யிருநிலத்தே
பன்னுபல வேதாக மத்துண்மை தெளிந்தேற்றிப் பலர்வி யக்க
மன்னியவை திகசைவ சித்தாந்த முலகமெலா மதிக்கச் செய்யும்
என்னிருகண் மணியான கலியாண சுந்தரனை [illegible].

கறைதருகண் டத்தவனே யுயர்தெய்வ மெனநாட்டிக் கருணை யோங்கும்
நிறைதருவை திகசைவ சித்தாந்த சரபமென நிலைத்த நாளும்
முறையுடைய பலசாத்தி ரங்களெல்லாம் பயிற்றுவிக்கு முறைமை யுற்ற
உறைதருமெங் கலியாண சுந்தரனின் கீர்த்தியினை யுரைப்பா ரியாரே.

பாதிமதி யணிந்தபிரா னடியவரைச் சார்ந்துபுரி பண்பின் வந்து
பூதிமணி யைக்கெழுத்தே சத்திபஞ்சாக் ஷரமோது ரைந்து யார்க்கும்
நீதிவழி போதித்துச் சைவநெறி வளர்க்கும் [illegible]
கோதில்புகழ் வாய்ந்தகலி யாணசுந்த ரனையன்புற் றேத்து வோமே.

தொண்டர்பணி செய்வதுவே கனிசிறந்த சிவபணியாந் துய்மை யான
பண்டைமறை யனைத்திலுமே பேசுவது தெரிந்தியாம் பாரி லென்று
கண்டதனைச் செந்தமிழிற் பிரசங்கஞ் செய்யுங் கருணை வாய்ந்த
கொண்டிறல்சேர் கலியாண சுந்தரனின் னுயர்புலமை யுரைப்பா ராரே.

முத்திக்கு வித்தாக விருந்திடுவ தேதென்னின் முதிர்ச்சி வாய்ந்த
பத்தியொன் றேயென்றிங் கெவ்வெவர்க்குந் திடமுடனே பரிந் துரைக்கும்
எத்திசையும் புகழ்படைத்த விற்பன்னர்கள் கொண்டாட விருந்தே போற்றத்
தித்திக்கக் கவிபாடுங் கலியாண சுந்தரனென் செல்வப் பேறே.

நண்ணியமா ணவர்கட்குச் செந்தமிழ்நூ லனைத்தினையு நனிபோ தித்துத்
தண்ணியவை திகசைவ நெறியதனி லேயொழுகச் சதுரிற் செய்து
புண்ணியமே பொருளாக வேயடைந்து வேறுபொருள் புறக்கணித்த
கண்ணியனே கலியாண சுந்தரநின் னருமையினைக் கணிப்பார் யாரே.

பாடமது சொல்லென்றாற் பணமேது கொடுத்திடுவாய் பரிவா யென்றே
நாடதனி லேதிரிந்து பொருள்தேடி வயிறுவளர்க் கலைவுஞ்செய் கல்வி
யாடவர்க ளனைவர்க்குங் கலைப்பொருளோ மானவர்க்கிங் காதரமாக
ஈடறவே சொரிகின்ற கலியாண சுந்தரநின் னிறைமை யென்னே.

மன்னியவோர் மார்க்கால நியாயமென மாணவரை மகிழ்ந்தணைத்துப்
பன்னரிய செந்தமிழ்நற் கல்வியினி லுயர்புலமை பரிவிற் றந்து
முன்னவன்ற னத்துவித போதத்தால் நற்போத முனைவர்க் கோக்கும்
தன்னிகரிற் கலியாண சுந்தரனென் குருமணியாஞ் சாமி நீயே.

சென்னைப் புரசை இந்துமத பாலிகா

தருமபாடசாலைத் தமிழ்ப்பண்டிதர்

## பிரசங்காமிருதம்

## பாலூர் - வேலுதேசிகரவர்கள்

இயற்றிய

சாதனசதுட்கம்

### சரியை

பதிபசு பாச விலக்கண மூன்றும் பகர்ந்தாழு மடியேற் கருளிச்
சதிசெயும் பாச மகற்று முறையுஞ் சாற்றுயிர் பதியடை வகையும்
விதமுறக் காட்ட வித்தியா குருவாய் மேதினி தனிலுருக் கொண்டு
சுதைநிகர் சரியை யருள்கலி யாண சுந்தர சிவனடி போற்றி.

### கிரியை

வாழிய வடியேன் பவந்தொறு மீட்டு மாத்தவப் பகுதியா னருளான்
ஊழிதோ றோங்கு முயர்சிவ யார்த்தத் தொருமுதல் தன்னுருக் கரக்கே
யாழிசு மூலகி லென்றனைப் போல்வந் தரியவா கமத்திறக் கிரியை
சூழுறப் போதித் தருள்கலி யாண சுந்தர குருவடி போற்றி.

### யோகம்

சிந்தனைக் கரிய சிவபெரு மானே திருவருள் சுரந்துக லியாண
சுந்தர னென்னத் திருவுருத் தாங்கிச் சூழ்வளி யலைசரு கதுபோல்
சந்தத மாயை தனிலலை யடியேன் றன்னரு ளோகினை யடைய
வந்துதன் சொரூப நிலைதனைக் காட்டும் வரதனுங் குருபதம் போற்றி.

### ஞானம்

சிலைவடப் பாங்கர் முனிவருக் கன்று சிவாகமப் பொருளுப தேசித்
திலகுறுந் தனைக்காட் டையனே கல்வி யாணசுந் தரனெனு நாமத்
தலைகடற் புடவி யவதரித் தரிய வருளுறுந் தனைப்பெறு ஞான
நிலையுறப் போதித் தடியனுக் கருளு நின்மல குருபதம் போற்றி.

சென்னை ஐக்கிய நாணய சங்கம் ரிஜிஸ்தராபீஸ்

அக்கவுண்டண்ட்

## வா· தி கோவிந்தராஜமுதலியாரவர்கள்

இயற்றிய

## இரத்தினபஞ்சகம்

1. சீர்பெருகு கலைபலவுந் தெரிவித்துச் சிறந்தசிவன் பதியெனவே தேற்றி மிக்க
பார்பெருகுசிவதருமம்பண்ணுவித்துப்பலசமயநிலைகடமைப்பாங்கிற்காட்டி
நீர்பெருகுநற்குணங்கணிகழச்செய்துநின்மலனையெந்நாளுநினையச்செய்தே
யேர்பெருகு சனனபல னெல்லாநல்கு மெழிற்குரவ னிணையடிக ளிறைஞ்சி [வாழ்வாம்.

### வேறு

2. திருவோங்க வுருவோங்குந் திகழ்சென்னை மாநகரிற் சிறப்பத் தோன்றி
மருவோங்க மலரோங்கும் வான்றருவா ழிமையவரு மகிழச் சைவத்
துருவோங்க வொளியோங்கு முயர்ந்தபிர சங்கமுத லாய வற்றாற்
றிருவோங்க வுலகோங்கும் படிசெய்த சீர்த்திமிகு சிரேட்ட னன்றோ.

3. கலியாண சுந்தரனுங் கருணைவள்ளல் காதலுடன் சுட்டி பூர்த்தி
நலியாத வன்னமதா நாமகிழ நானிலத்தி னன்கு செய்தே
யொலியாரு மகோததிசூ ழுலகதனி லூழிவரை வாழ்ந்து பின்னும்
வலியாருஞ் சைவமத மேன்மைதெரிந் தெஞ்ஞான்றும் வாழ்க மாதோ.

4. இன்னவன்போ லன்னையமா ரென்னைமுடன் யாவர்க்கும் வித்தை யீயுங்
கன்னனெனவன் கருதலர்க்கு நன்மைசெயுங் காதலவன் கசிந்து சிந்தை [காத்
பொன்னவன்போற்போதித்துப்புகழ்ச்சைவம்பரப்புதலே பொழுது போக்
தன்னகத்திற் கொண்டுள்ள தகவுமிக்கான் வாழியென்றுந் தரணி மீதே.

5. தேம்வாழுங் கங்கைமுடிச் சிவபெருமான் சீர்பரவித் திருவை யார்ந்து
நாம்வாழ நமர்வாழ நானிலத்தோர் நனிவாழ நல்ல நீறு
தாம்வாழ வுருத்திராக்கந் தண்ணிகரில் பஞ்சவன்னந் தழைத்து வாழ
வோம்வாழ வொலிசீர்த்தி கலியாண சுந்தரனு முரவோன் வாழ்க.

தமிழ்ப்பண்டிதர்
### வல்லி. ப. தெய்வநாயகமுதலியாரவர்கள்
இயற்றியது

குணகடல் குமரி குடகுவேங் கடமுங் கோதிறீ வாந்தர மளவு
மணவழ குயரவ தானியென் றுரைக்க மாசிலாப் புகழினை வாய்ந்து
கணமதி விலக்கக் கவிகளைப் பாடக் காதலாய்ப் படிப்பவர்க் கூட்டிப்
பணமுடிப் பரமன் பத்தியுஞ் சைவப் பான்மையு முடையவென் குருவே.

சிவராஜயோகி
### தி. ம. மாணிக்கசெட்டியாரவர்கள்
இயற்றியது

செந்தமிழ்நற் கல்வியினி லுறும்பெருமை யனைத்தினையுஞ் செய்யவே காணை
உந்துறுமென் மனமதனி லேயடைத்திங் ககலையாண்ட வுயர்கோ மானே
விந்தைமிகு மத்துவித சித்தாந்த சரபமென விளங்கு வோனே
எந்தைநிகர் பூவைவரு கலியாண சுந்தரநின் னிருதாள் போற்றி.

அக்கவுண்டன்ட் ஜெனரல் ஆபீஸ் லோக்கல்பண்டு ஆடிட்டர்
### வித்துவான். நின்றை. தங்கவேலுமுதலியாரவர்கள்
இயற்றியது

பொய்கண்ட புறச்சமயர் புரளியினில் மயங்காமே புனித மான
மெய்கண்ட சாத்திரத்தி னுண்மையையென் னிதயத்தில் விளங்கி வைத்த
கைகண்ட வவதானிக் கலியாண சுந்தரநற் கவிஞர் சிங்கம்
ஐகொண்ட வென்னுள்ளக் குகையதனி லெந்நாளு மமருமாதோ.

### சிட்டத்தூர். தங்கவேலுமுதலியாரவர்கள்
இயற்றியது

படர்ந்தெழுமென் மனமெனுமோர் நிலத்திருந்திச் சமூகத்தமிழாம் பைங்கூழோ
இடம்பெறவே வளர்த்ததன்க ணுறுபயனுஞ் சிவஞானத் தீஞ்சுவைப்பால்
மடமகற்ற மகிழ்ந்தளித்தோன் சித்தாந்த சரபமெனு மன்னன் பேர்
அடரவதானிப் பூவைக் கலியாண சுந்தரனை வழுத்தி வாழ்வாம்.

இளையனார்வேலூர்
### வி. கே. முத்துமாணிக்கமுதலியாரவர்கள்
இயற்றியது

சீதமல ரினைத்தேடித் தேன்வண்டு பற்பலவாச் சேர்தல்போலப்
போதமுறு நின்றன்னை மாணவர்க ளெண்ணிலர்கள் போந்து ஞான
நீதமுறு சித்தாந்த நயந்தேறிச் சைவரென நிலைத்திட் டாராம்
ஓதரிய மணவழகே யுன்பெருமை யென்னவகை யுரைக்கற் பாற்றே.

பிக்காவல் சப்ரிஜிஸ்ட்டரார்

**சால. மாணிக்கம்பிள்ளையவர்கள் B. A.**

இயற்றியது

கைம்மாறு கருதாமற் கல்வியினைப் போதிக்குங் கருணை வள்ளால்
இம்மாநிலந்தன்னிற் சிவமணமே நனிகமழ வியற்று மேலோய்
அம்மாநிற் கேதகுமால் சித்தாந்த சரபமெனு மரிய பட்டம்
கம்மார்ந்த பூவைவரு கலியாண சுந்தரவென் கருத்தின் வாழ்வே.

மோசூர். பொன்னம்பல முதலியா ரவர்கள் குமாரர்

அக்கவுண்டன்ட் ஜெனரல் ஆபீஸ்

**மோ. கந்தசாமிமுதலியாரவர்கள் B. A.**

இயற்றியது

திருவருட் பிரகாச வள்ளலா ரருட்பாவிற் றிளைத்தற் கேற்ற
கருவமர்வை திகசைவ சித்தாந்தப் புலமையினுன் களிக்கச் செய்து
வருமெனது கோமானை ஞானமிகு சீமானை மதிப்பு மானைத்
தெருள்வளர்நற் கலியாண சுந்தரப்பே ருடையானைச் சிந்தித்துய்வாம்.

"ஞானகாந்தி" "தசாவதி" "காதல்" மதிமாலினி" முதலிய வியற்றிய

**செ. யம. இராஜாசெட்டியாரவர்கள் M. B. P. T.**

பன்னரிய செந்தமிழ்நற் கடம்படிந்து பொருணீரைப் பருகிச் சான்றோர்
உன்னியுறை சென்னைநகர்க் குவட்டேறி மாணவர்க ளுளம்பொழிந்து
மன்னணியகல் விப்பயிரை விளைவிக்கு மேகமென வதிந்து வாழும்
என்னருமைப் பூவைநகர் மணவழகு பல்லாண்டிங் கினிது வாழ்க.

சென்னைக் கவர்ன்மென்ட் பிரெஸ்

**ஆரணி. சுப்பராயமுதலியாரவர்கள்**

இயற்றியது

அண்டர்நா யகனருளோ யோகாடி பூதிமணி யணிந்து வாழும்
தொண்டர்பணி யேசிறந்த மோட்சசா தனமென்னச் சுருதி கூறித்
தெண்டமிழிற் பிரசங்க மேசெய்து தெளிவிக்குந் திகழு ஞான
கொண்டனிகர் கலியாண சுந்தரனற் கலைவினிலுங் குறித்துவாழ்வாம்.

# குருதோத்திரம்.

ஜோசியப்புலமை
## வா. கோபாலுமுதலியாரவர்கள்
இயற்றியது

வாக்கதனிற் சனிராகு வாய்க்கப்பெற் றிருந்தலினால் வரையு முன்றன்
பாக்களினால் வாழ்த்திடினும் வைதிடினும் பலித்திடுமால் பாரி லுன்னைத்
தாக்கியுயர் கல்வியினில் ஜயித்திடுவா ரொருவரிலை தக்க ஞான
ஆக்கமுறும் பூவைநகர்க் கலியாண சுந்தரநின் னடிகள் போற்றி.

தமிழ்ப்பண்டிதரும், சைவபுராணிகருமாகிய
## கா. இ. சிதம்பரசாமிபண்டிதரவர்கள்
இயற்றியது

சீர்பூத்த சென்னைமுதற் சேதுவரை புகழ்நாட்டிச் செகத்தின் மீது
கார்பூத்த புறச்சமயங் கலங்கிடவே கலைஞானங் கனமாய் மேவி
ஏர்பூத்த சித்தாந்த சரபமவ தானியெனு மொழிபெறும் பூவை
ஊர்பூத்த கலியாண சுந்தரவென் குருமேன்மை யுரைக்கற் பாற்றோ.

பிரசங்கரத்னாகரம் சிதம்பரம் வடிவேற்பிள்ளை யவர்கள் குமாரர்
## சி. வ. தணிகாசலம்பிள்ளையவர்கள்
இயற்றியது

சித்தாந்த சரபமட் டாவதா னிப்பெயராற் சிறப்புற் றோங்கிப்
பித்தாந்தப் புன்சமயர் பிணக்கறுக்கப் பேருலகிற் பெரிதும் போற்று
முத்தாந்த மென்னுமதை மெய்கண்ட சாத்திரத்தால் முடிவைக் காட்டுஞ்
சுத்தாத்து விதஞானி கலியாண சுந்தரனார்ட் சுகித்து வாழ்வாம்.

## சே. தெய்வசிகாமணிசெட்டியாரவர்கள்
இயற்றியது

எந்நாளுஞ் சித்தாந்த வுண்மையினை யெவர்பாலு மெடுத் துரைக்க
முன்னாக வந்துவை திகசைவ பிரசங்க முறையே செய்யு
மன்னாகு மவதானிக் கலியாண சுந்தரகுரு மாதவத்தன்
பொன்னான செஞ்சரணை நெஞ்சார வாழ்த்துவதென் புண்ணியந் தானே.

புராணப்பிரசங்கம்
## இ. தங்கவேற்பிள்ளையவர்கள்
இயற்றியது

பட்டாங்கி லுறுபுலவர் பதிபசுபா சப்பொருளைப் பண்பிற் றேரச்
சுட்டாய சுத்தாத்து விதவுண்மை போதிக்குஞ் சுகுணம் வாய்ந்து
தெட்டார்ந்த சித்தாந்த சரபமெனப் புகழோங்கித் திகழும் பூவை
யட்டாவ தானகலி யாணசுந் தரனடியை யகத்துள் வைப்பாம்.

"இராமலிங்கம்" "அருட்பிரகாசம்" "அருளானந்தம்" "சிதாகாசம்"
முதலிய ஆங்கிலத்தி லியற்றிய

## திரு. சாம்பசிவமுதலியாரவர்கள்

இயற்றியது

அருட்சார்நற் பெருந்தகையி ராமலிங்க வள்ளலடிக் கன்பு பூண்டு
பொருட்சாரு மாங்கிலநூ லியாணியற்றப் பலவகைசற் போத நல்கித்
தெருட்சார்ந்த சித்தாந்த சரபமென வேபுவியிற் சிறப்ப நின்று
மருட்சாரெம் வினையகற்றுங் கலியாண சுந்தரப்பேர் மகிப வாழி.

சிவரம் மகமதியர் எலிமெண்டெரி ஸ்கூல் உபாத்தியாயர்

## வா. தி. மாசிலாமணிமுதலியாரவர்கள்

இயற்றியது

பொன்னுருஞ் செஞ்சடையெம் புண்ணியனே மறையனைத்தும் புகழத் தக்க
தென்னுருந் தெய்வமெனப் புறச்சமய ருளநாட்டுந் திறம் வாய்ந்த
மன்னுறு மணவழகே குணவழகே மதியழகே மனத்தி லுன்னை
எந்நாளு மேயெண்ணி யுன்பெயரே மந்திரமா யெண்ணு வேனால்.

M. & S. M. ரெயில்வே சிப் ஆடிட்டர்ஸ் ஆபீஸ்

## மணி. வே. நடராஜசெட்டியாரவர்கள்

இயற்றியது

மன்னியநற் சைவபுரா ணங்களினி லேவிளங்கு மகிமை வாய்ந்த
பன்னரிய காதைகளைச் சித்தாந்தப் பார்வையினுற் பார்த்துத் தேற
நன்னயமாப் போதிக்கு ஞானசிகா மணியாகி நாளுங் கல்வி
மன்னவென வொளிர்பூவைக் கலியாண சுந்தரனின் மலர்த்தாள் போற்றி

மகாஜனோபகார சங்க உதவி காரியதரிசி

## கா. ஐம்புலிங்கமுதலியாரவர்கள்

இயற்றியது

தந்தைதன் அதனிடத்தில் வைக்கின்ற வன்பெனத் தயவா யென்றன்
புந்தியினி லேயமையச் சிவபெருமான் பரத்துவநற் புகழனைத்தும்
விந்தையுறப் போதித்துப் புறச்சமயப் பகுதியில் வீழா தாளும்
சந்தமிகு பூவைநகர்க் கலியாண சுந்தரன்றாள் தலைமேற் கொள்வாம்.

# குருதோத்திரம்.

காணியம்பாக்கம் ஜோசியர் இராகவமுதலியாரவர்கள் குமாரர்

## ஜோசியம் கா. சொக்கலிங்கமுதலியாரவர்கள்

இயற்றியது

சூரியன்சுக் கிரன்கேது மூவருமுச் சங்கமொனத் துலங்கப் பெற்ற
சீரியனே முத்தமிழ்க்கு முதல்வனென வேவிளங்குஞ் சிறந்த ஞான
வீரியனே வியன்றுறை யேயென்ன வித்தையினை மிகப்போ திக்கும்
ஆரியனே பூவைநகர்க் கலியாண சுந்தரநின் னடிகள் போற்றி.

* * *

சீவரம் - அருணாசல ஜோசியரவர்கள் குமாரர்

## சி. பஞ்சநாதஜோசியரவர்கள்

இயற்றியது

ஞானகு ரியன்சாந்த சந்திரன்வாக் கினிற்செவ்வாய் நன்னு வோர்க்கு
மோனநிலை யூட்டுபுதன் கலையனைத்து நிறைவியாழ முறையிற் குந்த
தானகீர்த் தியில்வெள்ளி புன்சமயர் சனியென்ன வவதரித்த
தேனடரும் பூவைநகர்க் கலியாண சுந்தரன்றாள் சிந்திப் போரும்.

* * *

தின்னனூர் - வையாபுரி முதலியாரவர்கள் மனைவியார்

## ஸ்ரீமதி. அகிலாண்டநாயகியம்மாள்

இயற்றியது

சின்னவய தேமுதலாய்ச் சீராட்டி யெனைவளர்த்தாய் சிறந்த கல்வி
நன்னயமும் போதித்தாய் கவிபாடுந் திறத்தினையு நண்ணச் செய்தாய்
என்னரிய மாமனீ தந்தைநீ குருவுநீ யிறைவ னீயே
மன்னியநற் பூவைகலி யாணசுந் தரநின்னை வழுத்து வேனே.

* * *

வா. தி. கோவிந்தராஜ முதலியாரவர்கள் மனைவியார்

## ஸ்ரீமதி. ஜெயலட்சுமியம்மாள்

இயற்றியது

மன்னியசற் குருமணியே மாசைவ சிகாமணியே மனங்க ளிக்கும்
பன்னரிய கவிமணியே கற்றோர்கள் கண்மணியே பலவே தயத்தும்
உன்னுபுகழ் விண்மணியே பிரசங்கம் பொழிமணியே முதிர்ந்த ஞானச்
சொன்னயமார் கலியாண சுந்தரப்பேர் மணியேயுன் றுணைத்தாள் போற்றி.

* * *

சிதம்பரம். மௌனசுவாமி மடத்தடிமை

## ஸ்ரீமதி. சிவகடாட்சம்மாள்

இயற்றியது

கல்வியையென் கணவர்க்கு மெளியேற்குங் கற்பித்துக் கயிலைக் கௌரிச்
செல்வியையென் னிதயத்தி லேயிருத்தி யுபாசிக்கச் செய்வித் தென்றன்
வல்வினையைக் கரைத்திடவும் வரும்வினையைத் தடுத்திடவும் வகைபுரிந்த
பல்வினைவி லுயர்பூவைக் கலியாண சுந்தரன்றன் பாதம் போற்றி.

சென்னை வேப்பேரி எஸ். பி. ஜி. ஐஸ்கூல்

தமிழ்ப்புலவர்

## மணிமங்கலம் திருநாவுக்கரசு முதலியாரவர்கள்

இயற்றிய

# பாவலராற்றுப்படை

வெண்பா

உற்ற துணிக்கோடு மோங்கார நல்வடிவும்
பெற்று விளங்கும் பெருங்களிறே—யிற்றைநாள்
பாவலராற் றுப்படையைப் பண்புகெழப் பாடிடவே
யாவலொடு மேவா யகம்.

(புலமை பெற்றுவந்த இளைஞ னெதிர்வந்த
இளைஞனை விளித்தல்)

நேரிசையாசிரியப்பா

நனைந்துலை யுலறி னென்றனம் வருந்த
விளைந்துலை சிறந்த மெண்ணிற் பிறப்பிற்
றெருக்க பொருணிலைத் தோமற நாடு
மக்கட் பிறங்கை மாண்புமிக் கதுவே
உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றெனும்
பொய்யிற் பொருளுரை புந்தியு னிறீஇக்
கையினி லேடு கவிழாத் தாங்குபு
வாடிய மெய்யுட னாடிய விழிகளும்
பேரவர் நெடுநாட் பெரிது குடியிருந்த
யீர மில்லா வெறுநிலம் புரைய
மிடுக்கட் பாரிவையு முலறிய கருப்பு
மிடுக்கு றெ தோற்றமு மென்மைநீ ரிதழும்
பொருளது நுறியா மருள்படு முறையுங்
காலோர் நடையிற் கோலேய் தயிரிக்
கலங்கிய நெஞ்சொடு கவலைகை நீங்கி
வலங்கொள வயின்வயின் வறிதே திரிதரு
மிளைஞ நேரே வளங்குவல் கேண்மதி

(எதிர்வந்த இளைஞன் நுதலியது வினாதல்)

வளைவி லாகூழ் விளைவி னீயு
மாற்றெதிர்ப் பட்டனை யாற்றல் பெற்றனையா
லளியை நீயென வருநாறு மனத்திற்
றெளியும் பெற்றியிற் றெரிக்கும் வாய்மொழி
யுள்ளுறக் கொளீஇ யுய்குவை யுய்குவை
கள்ளங் கடந்த காமுறு மிளமைப்
பருவ மிமைப்பிற் பாங்குறக் கழியு
மொருமை தெருண்டுநீ யினியே படர்குவை
கல்விப் பெருவளங் காட்சி நனிமிக
வல்லே பெறநீ வாய்ந்த நற்குரவர்
காண வியல்பிற் கலங்கினை கொல்லோ
மாணாப் புலமை மாக்களைக் குறித்துப்
பேணா தவரைப் பெட்டாங் கியலா
வாணா வழுப்படு மவமுற் றனைகொல்
மிடிகுடி கொண்ட மடியா மாக்களை
நணுகுபு வலல நவையுற் றனைகொல்
பொன்னே பொருளாப் போற்றுறு மாக்களைக்
கொன்னே யணுகிக் குறையுற் றனைகொல்
நுழைபொரு டமக்கென நயவா திருக்கும்
வழுவுறு வோரான் மாழ்கினை கொல்லோ
திண்ணிய வழுக்கா றென்னுந் திறப்பேய்
நண்ணிய சிலபொரு ணவின்றோ ரென்னோர்
சொல்ல ளெங்கொளாத் தோமுறு வோரா
னல்லற் பட்டே யணங்கினை கொல்லோ

அதாஅன்று

இலக்கிய நிறைந்தோ ரிலக்கணம் பொலிந்தோர்
நலம்படு மெண்ணூ னவையறத் தேறுநர்
கலம்படு சாத்திர மைபோகு கேள்வியர்
நூலு நுழையா நுண்ணிய வறிவினர்
சாலு நூனெறி சாற்றுந் தகைமையர்
கட்புலப் படாத கற்றவக் குழையோ

(கல்வியின் மாட்சி தெரித்தல்)

விளம்பழங் கடுக்கும் வளம்படு வையத்
துண்மை யின்மை யுளங்கொள வேண்டுநர்

கண்ணெனப் படூஉங் கல்வி யின்றே
லளந்தறி மதுகை யாற்றின்வா ராது
களங்கனி நிகர்த்து விளங்கெழில் வீங்கு
நீல கண்டத் தாலமர் செல்வ
னருளறம் பூண்டே யல்லாந் திருப்ப
விருநீர் வேலி யிம்பரி னுகரு
மெய்வாய்கண் மூக்குச் செவியென வழுந்து
மைவா யின்ப மடைதலு மரிதே

அதாஅன்று

வேறுவேறு மாறுகொ ளியற்கை
யவனியின் வியப்பை யறிதலு மரிதே
யருஅ யாண ரியல்பினிற் பெருஅக்
கல்வி யெனப்படூஉஞ் செல்வ மடமக
ளெழிலெலாந் திரண்டோ ரின்பமே யுருவாய்த்
தழூவும் பருவமுந் தன்மையு மேவரப்
புதுநலங் கனிந்து முதுபே ரின்பங்
கதுமெனக் கழியுங் கடைப்படு மின்ப
முனியா வெறுப்பிற் கனியா தளிப்பச்
சமைந்து கிடந்தனள் சார்பு பெறினம்ம
யிம்மை யின்பமு மம்மைப் பேறுஞ்
செம்புலச் செல்வமுஞ் செறிகுவை யன்றே

(இசைப்புலவர் இயல்புரைத்தல்)

புலத்துறை முற்றிய பெரியர் சீர்த்தி
யலந்தா லுரைத்தல் வாய்வ தன்றோ
நல்லிசைப் புலமை நக்கீர தேவெனுந்
தொல்லிய வுலக மின்றுகா துளக்குந்
தொலையாப் பெயரமை கலைமாச் செல்வன்
வாய்வெள் ளேறு வகைபெற வுகைத்துச்
சேய்பிறழ் கருங்கட் செவ்வாய்ப் பசுங்கொடி
யறிவு பழுத்த வருமறை முகிழ்முலைச்
செறிதர விடாஅஞ் சேய்மை யண்மை
காந்த பொருளின் கடவுட் பாடல்
குறிப்பு மெய்யெனக் குறித்தன னின்று
முற்ற நாட்ட முன்னுரைப் பாவேல்

கற்றவர் பெருமை சொற்றலு மெளிதோ
வற்றவ ரியல்பினி தறிதிநல் லண்ணே

(கேட்க என்று நயம்படக் கிளத்தல்)

விற்றைநா ணீயு மினிதே படர்ந்து
வேண்டுநர் வேண்டியாங் கெய்துஞ் சிறப்பிற்
காண்டகு காட்சியுங் கைவரப் பண்ணுங்
கடவுட் பேணிக் கவலை கழிப்பித்
திடமுறு நெஞ்சிற் சேறிமன் செல்வ
நன்மை கிளருமுன் நல்வினைத் தானு
மின்றே பலித்த தின்றே பலிக்குது
வீவில் விழுச்செல்வங் கல்வி யொன்றே
தாவில் வேணவாத் தாங்குறப் பெற்றுப்
பிற்றைநிலை முனிந்து கற்றல்லை விட்டோர்
பாற்கடற் போலப் பரந்து கிளர்தரு
நூற்கடற் றனிப்படீஇ நுவலுந் திவலையிற்
சிறிதுகற் றளவில் வெறுத்தனோர் பலரோ
உலகநூ லொன்றோ யலகில கற்று
நலம்படா வினையரு நனிபல ரேகா

(தன்வரலாறுகூறல்)

ணன்ன நீர்மை யணுகா தொழியப்
புன்மை யகலப் புலமை மீக்கொள
வென்வர லாற்றை யியம்புவ லைய
நயம்படு நன்மொழிப் பயங்கெழக் கேளினி
னியங்க ணிலையெனு மியற்கை யிரண்டனு
ளடங்கலு மொடுங்கு மவனியின் கண்மே
லியற்கை செயற்கை யினிதி னுணரக்
கல்விக் கருவியைக் காணூ தலைந்து
தொல்வரம் பழியா நல்லா சிரியரைத்
துருவித் துருவித் தொலைந்தன னெடுநாள்
பின்னாட் சிலரைப் பெட்பி னடுத்தே
பின்னிழற் புரைந்து பிரியாது வைகி
யாணை போற்றி யடங்குபு வொழுகிப்
பொன்னுந் தூசும் பொலிவன நல்கி
யன்பு கெழீஇய வையெ னுளத்தொடு

பூசனை யாற்றிய மாசி லூற்பொருட்
புலப்படத் தெருட்டாப் புன்மையிற் புலர்ந்து
பலபக லொழிந்தன பண்பிலா மாக்கள்
மரபுநிலை திரிந்து மதியறை போகி
விரவுறு மிலக்கிய விலக்கண வியனெறி
கற்றுக்கை போகாக் கனை யரிற் கூட்டத்
தெற்றன வுருழிச் செல்லா தொழிந்தேன்
நீடு நினைந்து வாடுபு கிடந்தனன்
தமிழின் றலைவ னென்று தலைப்படு
மமிழ்தெனப் பொருள்வள னறிவ தென்றுகொல்
பேது நீங்கப் பெறுவ தென்றுகொல்
கோது நீங்கிக் குலவுகந் தமிழின்
செம்பொருள் கண்டு செம்மாப் பன்கொ
லென்று பலபட வெண்ணுபு கிடந்தேன்

(தலைவற் காண்டலும் தமிழ்பயிறலும்)

மென்மை தழீஇய மேதகு கன்னிப்
புதுமை தமிழ்க்கோர் புதுவிளக் கெனவரு
தோன்றலைக் கண்டு தொழுதுவாய் திறந்தே
யான்றுவெறு கேள்விய னகத்துசெவி மடுப்பப்
பட்டாங்கு விளம்பத் தட்டாது கேட்டு
முட்டாட் டாமரை முழுமலர் நாப்பண்
கட்டெழி லெறிக்குங் கடவுளி னிருந்தனன்
தண்டா விருப்பின் முனிநகை புரிந்து
கண்டெனை யினிக்குங் காமர் தீவியம்
புலமையின் மெளிவும் புகற்சியுந் ததைய
நலமுற விழுமிக் குலாயின னன்றே
யாண்டனை பின்னை ரருளுடனோக்கி
மாண்டெழின் மாமணி மகிழுமக் கோத்த
நன்மணிக் கோவையிற் சொன்மணி யாத்துப்
பத்தி பழுநிய பழமொழி காட்சிக்
கைத்தலங் கனியெனக் காட்டுபு விட்டின்
வித்தக யாழுமை விரைவி னளிக்குறாஉம்
பழிதபு கயற்கட் பாவை மகத்தமிழ்
கழியவு மின்புற வண்மை கழறினன்
சொற்றொறுங் காட்டிய சொல்வளப் பொருள்வளப்

பெற்றி வழுத்தவும் பெரிது பெரிதே
நாடொறு மவனுநா ணவிலு மாலையன்
நீடுற யானு நித்தல்போம் பெற்றியன்
பன்னாள் பலருடன் பல்காற் சென்றும்
முன்னாள் போல முழுவிருப் பினனே
முற்பகன் மலர்ந்து பிற்கூம் பாம
லிரவலர்க் கென்றுங் கரைமனத் தினனே
யானு விருப்பி னுறைந்தனன் பன்னாள்
நோனு வுடம்பி னொளிவுங் கூறினன்
முப்பொருள் விளக்கு முறைமையிற் சான்ற
செப்பரு புகழுறு சிவஞான போத
திப்பிய நூலின் றிறமும் புகன்றன
னொப்புறு நூற்பொரு ளொப்பு முரணு
மாறுகோ ளின்மையு மயக்கறுத் தழுமை
வேறுவேறு நன்பொருள் வேண்டி வேண்டி
யருளா ரமுதுட னளியக் குழைத்துப்
பொருளா வூட்டினன் புந்தி நிறுவப்
பசுமரத் தாணி யறைந்தெனப் பகர்ந்தனன்
வசியுறு மரபின் வகையினிற் பிறந்து
வுள்ளுறை யுவமு மேனையுவ மையுந்
தெள்ளு மிறைச்சி செழும்பொருள் வண்மையும்
செம்பொருட் குறிப்புச் சேரிலக் கணப்பொருள்
வெம்புமெய்ப் பாடென விளங்குமெய்ப் பொருண்மையு
மன்பொடு கொளுவி யருளினன் றனதுந்
தசும்பு நிறைந்த தண்ணீர் சிவணா
வசியார் புலமை வைகிச் செறிந்தன
னென்போ னீயு மேத்துபு குறுகித்
துன்ப மொழிந்து துலங்குவை மன்னே

(தலைவற் பெற்றோர்)

தாளாண் வாழ்க்கை வேளாண் மரபினில்
காசறத் தோன்றிய மாசறு கேள்வியன்
செந்நாப் புலவர் செழுந்தீம் பாடல்
மன்னு மாலையொடு மலர்ந்த மார்பினன்
குவளைத் தொடலைத் திவளுந் தோளின
னழகு பழுத்தினி தொழுகு மேனிய

னமுதம் பிலிற்று மாசறு கேள்வி
தமக்கிணை யில்லாத் தமிழ்வரம் பாகும்
தெய்வச் சேக்கிழார் செவ்வாய் மலர்ந்த
தொண்டர் புராணத் தொண்டிறலடியவ
ரறுபான் மும்மை யருள்செறி மயிலை
திருத்தலம் வதிந்த புரைசால் வாயிலார்
வரத்தகு கால்வழி யுருத்த வும்ப
லலமரு பிறவி யாழியைக் கடக்க
நற்புணையாக நற்றவக் கொடியெனும்
பொற்பார் வடிவாம் பிகைநாட் பேணும்
பல்புகழ் சென்னவ ராயகோத் திரத்துச்
செல்வக் குரிசில் செம்மொழி யாளன்
அண்ணுசாமிமா லருந்தவப் புதல்வன்
உண்ணுமுலையின் வயிறு வாய்த்தோ
னுள்ளக் கிழியி னுருவினைப் பொறிக்கத்
தெள்ளத் தெளியத் தெரிக்குவல் கேண்மோ

(தலைவன் உருவ முதலியன மொழிதல்)

பொறுமை நெடுமை குறியா வடிவினன்
துடியாமை மேனியன் றுளக்கறு நெஞ்சினன்
பரந்தொளி பரப்பும் பளகறு நுதலின்
வரந்தரு புண்ணியம் வாய்ந்த தெமக்கெனக்
காணுநர் கூறப் புண்ணிய நீறு
பூணுறுஞ் சைவ மங்கலம் பொலியுந்
தாமரை யனைத்தெனக் காமரு முகத்தின
னருள்குடி யிருக்குந் தெருள்பெறு விழியினன்
கேள்வி நிறைந்து கேழ்கிளர் செவியின
னுண்ணுணர் வுண்ணிய நீண்ட நாசியன்
பாமணங் கமழுந் திருவாய் மலரின
னவரதங் கொழித்துக் கனின்ற நாவினன்
கண்டோர் கண்ணுங் கருத்துங் கவர்பு
மண்டிய வாணய மந்திறை கொண்டு
மாடகம் புனைந்த வங்கமா மணியின்
பீடமை மாலை பிறங்கு மார்பினன்
கொட்டைக் கரையப் பட்டுத் தூசினன்

சைவ சிகாமணி வைதிக நன்மணி
திவ்வியம் பழுத்த சைவசித் தாந்தி
யெவ்வெவர் தம்மையு மவ்விய மின்றி
யாட்கொளு மான்றோ னருளுரு வினனே
கோட்டமில் மனத்துக் குணப்பெருங் குன்றம்
பன்முறை கேட்பினுந் தன்மனம் வெகுளான்
தகவில கூறினுந் தான்முனி யானே
யிகழுநர்த் தாங்கலு மியல்பி னமைந்தோனே
திகழு நுண்ணறிவின் றிண்மை பெற்றோன்
வழுக்கியும் பிறர்நவை வாய்மொழி யானே
வைதிக சைவம் வளர்க்கும் வான்முகில்
மைதிகழ் கண்டன் மலரடி தம்மைத்
தலையணி யாகத் தலைகொண் டவனே
மான்றோல் தைஇயிய மாணு விருக்கையிற்
றேன்றோய் நூற்களின் தேற்றந் தெரிக்குஞ்
செவ்வி வழுத்துவல் செவ்வனங் கேண்மதி

(தலைவன்பால் நூற்பொருளுணருநர்.)

பதிபசு பாசப் பழம்பொருள் கேட்குநர்
விதியுளி தத்துவ வியனூல் படிக்குந
ரன்பென் குழவி யழகுற வளர்க்குநரூஉஞ்
சின்மய புராணஞ் செவியிற் பருகுவோர்
பருகு வன்னத் திரியா னோக்குட
னேவிய மெய்ப்ப வாவலிற் கேட்போ
ரளவை நூலி னளவினை யறிவோர்
மறைப்பொருண் முழுவதூஉ மறையிற் கேட்குந
ரிலக்கணம் படிப்போ ரிலக்கியங் கற்போ
ரலக்கண் டபுக்க வையந் தெளிவோ
ரத்துவிதப் பொருளி னளப்பி லுண்மைத்
தத்துவந் தேர்வோர் தவநிலை யுணர்வோர்
சித்தர் நூலின் சித்தந் தெளியுந
ரின்னோர் பலரு மீண்டிய குழுவிற்
பன்மீ னடுவெ ணன்மதி போல
விருந்தோற் குறுகி யினியன கூறின்
விருந்தென வுன்னை விழைவுட னேற்பன்
போகென விடுக்கும் புன்மைய னல்லன்

(தலைவன் ஆட்கொளு முறைமை கூறல்)

தூய முத்தெனத் துவர்வாய் முறுவல்
சிறிதே தோன்றச் சிறுநகை புரிந்துள்
ளென்புங் குளிர வினியன நிகழ்த்தித்
தன்னடித் தொழும்பருட் சாலவுங் கொள்வ
னிலக்கிய விலக்கண மெல்லாங் கொளுவுவன்
கலக்குறுஞ் சமயக் கணக்கையுங் காட்டுவன்
சமயா தீதத் தனிப்பொரு ளுணர்த்துவ
னமையா மதங்களி னவலமுந் தெரிக்குவ
னிறைவ னின்னருட் டுறைகுளிப் பிப்பன்
பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
தற்றே ருறுவ தென்னு மருண்மொழி
யிற்றென விசைக்கு மியல்பும் விளக்குவன்
முத்தமிழ்ப் புலமையு முறைமையிற் பெறுகுவை
வித்தக ஞான விழுப்பொரு ளடைகுவை
பாவல ராகுவை நாவல ராகுவை
பரம்பொரு ளின்பம் வீட்டையு மிவற்றின்
றிறமுற மறிகுவை தீது மொழிகுவை

(தலைவன் ஆசிரியன்மார்)

சொர்க்க புரத்துத் துகடீர் காட்சியி
னாற்குநாற் பாப்பெலா மாற்றலிற் கடந்த
கல்வி வீரனுஞ் சொல்வரம் புணர்ந்த
இராம லிங்க வின்னிசைப் புலவன்
பிராவுறு மன்பின் விளக்கிய கல்வியன்
தொல்காப் பியமெனுந் தொல்லிலக் கணத்தை
யெழுத்தொடு பயின்று வழுத்துபு புலவன்
பேரைக் கோமான் பேர் ஜகநாத
னீறு கலைக்கடல் முகந்துணுங் கொண்மூ

(தலைவன்புகழ்மை)

பனிப்பகை யினைக்கும் பதமுறு நெஞ்சின்
தீற்றுக் கடவுற்று நிலையுறு மன்பன்
மாயா வாதப் பேயர் தம்மையு

மிறைக்குண மில்லா விழிகுணச் சிறுதே
முறைமை யறியா மாக்கள் தம்மையும்
தெருட்ட வாங்கவர் பேதமை கந்தைக்
கருத்திற் களைந்த வீரசூ ளாமணி
சைவ நல்விதைத் தகவுற வித்திக்
கைவரு ஞானக் கவின்முளை செழித்துப்
பத்திவி ருக்கத்திற் பகர்சரி யைமுதல்
நத்துறு வழிக ளொன்று மரும்பொடு
மலர்காய் கனியெனச் சிவமணங் கமழ்ந்து
கலமென நீற்றுக் கவசமாங் கவின்பெறச்
சேறு முரஞ்சிய முத்திச் சாற்றை
யூறு தீர்ப்பா னுள்வாய் மாந்துச்
செய்யும் பான்மையிற் சிவமடம் பலவினும்
மெய்புக ழோங்கி மேன்மைபெற் றனவே
பொய்ப்பொரு ளீங்கி மெய்ப்பொருட் கண்ட
மெய்கண்ட தேவன் மேவுசந் தான
செழுமைசே ணயிருந் திருவா வடுதுறை
கொழுமைவாய் மடத்திற் குறையாப் பரிசின

(தலைவன்பால் நூல் கேட்போர்)

ரொண்டகை தன்பா லமிழ்தம் பிலிற்று
நூலுணர் மாணவர் நாவலரும் பலரே
சாலுங் கவியிற் சதுரர் பலரே
புராண பிரசங்கம் புரிகுநர் பலரே
தத்துவ நுட்ப வித்தகர் பலரே
மாணவை மன்னுறு மாசிரியர் பலரே
புலவ ரவையிற் புலவர் பலரே
சமயத் தொகுதியி னமைபவர் பலரே
துறந்தோர் பலரே சிறந்தோர் பலரே
கரைமிடற் றந்தணன் கைகாட் டமைந்து
மறைப்பொருள் சைவ மாட்சி தெருளாது
புறப்புறச் சமயம் புக்கவர் பலரை
முன்னிலை நிறீஇய முதல்வர் பலரே

(தலைவன் இயற்றியநூல்கள் முதலியன)

பொன் முளைத்தற்ற பூரித் தெழுமுலை
நுளைச்சியர் விழிக்கு நுணங்கு கெண்டை

வளமுறும் நீர்புக்கு வருந்தி முழுக்கிருக்குந்
திருவான் மியூர்ப்புராணந் திவ்விய நவரச
மருமையிற் கெழுமவவ் வழகினிற் சொற்றோன்
சித்தாந்த சூடாமணி முத்தாந்த நூலை
யுலகிற் கருளியா வலகிற் புகழோ
னேற்றிக் கலம்பகம் வெற்றியிற் சாற்றினோன்
தருக்கசோ பானந் தகவுறத் தந்தோன்
செய்யு ளிலக்கணம் வையக் களித்தோ
னின்னண மாக வென்னுறு நூல்கள்
நாற்பான் மேலு நவின்ற நாவல
னென்கண் மாமணி யென்னுள் ளொளிர்மணி
யென்னுயிர்க் குறுபய னென்பிணி மருந்து
சைவ மங்கலத் தனித்துவக் கொழுந்து

(தலைவன் பெயர் முதலியன)

கல்யாண சுந்தரக் கவிஞ ரேற்றை
நல்லிறி கூட்டிய நலத்தை வியந்து
கண்குளிரக் கண்டு கைம்மலர் கூப்பி
யுண்மகிழ் துளும்ப வுவகையி னாடி
யல்லவா பாடி வையித் தாணிழல்
பூவினனைக் கழன்மலர் புனைந்து தலைமிசை
நாவொலா நீங்கி நலக்குவை தானே

(தலைவன் கோடையினை வியத்தல்)

பொன்னு மணியும் பூந்துகிற் றிரளும்
மன்னு மன்னின் மகிழ்ச்சி மிக்கு
வாரி வாரி மாரியின் வழங்குந்
தடக்கைக் வள்ளா தகைமையர் தம்முள்
காட்டிடை மயிற்குக் கலிங்கந் தந்தோ
னோட்டிடன் முல்லைக் கீந்த தேரினன்
சாதலொழிக்குந் தனிப்பனி நல்கின
னேதமில் வண்மை பெறுநும்பல வீகையர்
கொடைப் பயனு மிவை யடையேவ யோம்பு
மொருமைப் பயன்றி யிருமைக் குதவாதா
யென்றான் கொடைப் பய னெழுமையு முறின்

தவறுது தொடருந் தன்மையி னியமேன்
வள்ளல் பலரையு மெள்ளி மேம்படுநன்
வழுவி லவன்கொடைச் செழுமையும் பெறுகுவை

(பாலி நதியின் சிறப்பு)

கண்ணகன் ஞாலங் கலிப்பகை மாற்றி
நண்ணுறு போக நந்தா தடைய
வமிழ்தென வகுத்த வணிவென் கொண்மூ
விமிழ்திரை மேய்ந்தே யியம்பக் காரெனப்
பொலிந்து விசும்பிற் பொற்புறப் படர்ந்திவ்
வுலக முவப்ப மலிதுளி பொழிந்து
நிலமகண் முலையென விலங்குறு மடுக்கத்துத்
துயல்வரு மாரத் தியல்கெழு மருவி
யாறெனப் போந்தே யவனி புறந்தரூஉம்
வீறெலாம் விளக்கும் விளையுள் தேக்கும்
தீஞ்சுவைக் கலசத் திருவமிழ் தூட்டி
வாஞ்சையின் மகவை வளம்பெற வோம்பு
மன்னையே மானு மருந்தி பலவினை
மன்னவே புரைந்தது மாபாலி தானே
தீம்பாற் சாறு திசையெலா நிரப்பிக்
கூம்பா வுளத்திற் குறையினை முடித்துத்
தேம்பொதி கிளவிச் செவ்வாய் கலைமகள்
பொதிநலங் காட்டித் துறைபய னளிக்கும்
பாலி யென்னும் பான்முளைப் பாவை
சீல மோங்குஞ் செந்நெறிச் செல்வி
யினிது புரக்கு மியலைந் திணைவளக்
கனிவுகட் டுரைத்தல் கடப்பா டன்றே

(குறிஞ்சி நிலவளம்)

நாடக மகளிரின் பீடுறு பிறைமுகம்
மயிலென் சாயன் மடந்தையர் களிப்பத்
தோகை விரித்தே யோகையி னாலும்
முழுவலி காட்டி மிழற்றுங் கிள்ளை
நாணுற் றேகப் பூணிணை முலையார்
மதுர வாசகம் பொதிதேன் துளிப்பின்

காரறும் கடுக்குங் கவின்பெறு கூந்த
லாரமு கெறிக்கு மணியார் பிறைநுதல்
சிலையின் வாங்கு சிதையா நல்லெழிற்
கலைமறை வாங்குங் கட்டெழிற் புருவம்
விழைவு விடுத்த விழுமியோ ருள்ளமும்
விழைவிற் றழ விளங்கெழி லோங்குங்
குவளை மலரெனுங் கொழுங்கடை மழைக்கண்
தவலருஞ் சீர்பெறு தனிக்குமிழ் மூக்கு
பவளவள் ளத்திற் றவள முத்தெனச்
செவ்வாய்த் திகழுந் தெய்வ வனப்பி
னெவ்வாய் பிறந்தே யெங்கெழிற் றிரண்டே
செவ்விள நீரின் செவ்வியைத் தேய்த்துப்
பாற்கடற் றோன்றிய பதும முளையென
நூற்கடற் படியுநர் நுண்பொருட்டி ரளென
வீங்கிப் புடை திரண்ட வியப்பார் இருமுலை
பாங்கிற் கிளிச்சிறை பணைத்தனைப் பசுந்தோள்
நீல மணிபுரை நீண்மயி ரொழுங்கு
மேலைச் சுழியி னவ்வாங் குந்தி
சான்றோ ருசாப்போ லான்றொளிர் நுசுப்புச்
செங்கைச் சேர்ந்த தெய்விக மாமலர்
வொக்கச் சிவணிய வொளிதிகழ் தாமரை
யருந்துநாய் நாவிற் பொருந்திய சிறடி
தெள்ளொளி யொழுகுந் தெய்வப் பாவை
கைவல் லோவியன் கைம்முயன்று புனைந்த
வோவியக் கொழுந்து வாவிநல் லன்ன
மயிலொப் பேடை வியன்பொற் கொழுந்து
குரவர் பெருந்தவஞ் சோதிக் குருந்து
குரவர்கட் பாவை வள்ளி மடந்தை
போந்த பீட் டிணைப் புகழ்ந்திறு மாந்தும்
வாய்ந்தபே ரன்பின் வண்ணனாந் திரண்டவ்
வன்பின் பிறப்பே யாவியக் குழைந்துநல்
விண்புற் புரைபுரை யினிதி னுருகுங்
கண்ணுறு வார்க்குங் கண்ணிடந் தப்பிய
கண்ணப்ப தேவர் கவினைப் புகழ்ந்தும்

நண்ணும் வேடர் நலமா றுறையுளும்
நாவலூர் முத்தமிழ் நாவலர் தமக்கன்
றுருயிர் மருந்தின் விருந்தி னருத்திய
கச்சூ ரென்னுங் காமரு பதியு
மிரும்பு திரித்தனை மருப்பமை மான்கணை
மின்புற் றூடு மியல்பும் பெற்ற
நற்பெருங் குறிஞ்சி சொற்பெறு நிலனும்

(பாலை நிலவளம்)

கல்லுணக் கொள்ளுந் தொல்லியற் புறாவுங்
காதற் பெடையுடன் கலந்துமர் சேர்வை
யேதமில் வானுறை யெய்தா வுயர்கடுங்
குடுமிப் பாத்தி யடுக்கும் பாலையு

(முல்லை நிலவளம்)

முழுமதி மலைய முகமன் பலத்தினி
லெழுதுளி யமுத துளியி னிமைப்ப
விழிக்கடை சென்று வியனளை நோக்கச்
செழுவிய வேங்கைக் கொழுமல ருறழும்
சுணங்கு பூத்த வணிமுலை யசைய
வணங்கு நுண்மருங் கணங்கு பொருது
கைம்மலர் சிவப்ப மைவளை யரற்ற
வாய மங்கைய ரங்கை வருத்தமும்
பூவைப் புதுமலர் புயல்வண் ணன்றுயர்
தொழுனை யாற்றினுட் டுரக்கும் பொலங்கொடிப்
பாவையோ டாடிய பல்புகழ் குரவை
யாப்பயன் தருபாக் காடுங் காட்சியும்
பூப்படு முன்கண் பூவையர் புணர்முலை
போகம் வேட்டுப் புல்லாங் குழலிசை
நாகனல் லணையாய் நற்றவப் பேறே
கன்று குணிலாக் கனியுகுத் தோயே
பொன்றுஞ்சு மார்ப புத்தேளி னல்லார்
பன்னிறத் துகிலும் பான்மையி னொளித்தோய்
துவரச் சேந்த பவளம் வாடக்
கோதிற் பாண்டுக் குலத்தினைப் புரக்க
தூது நடந்த துழாய்நன் முகிலே
முந்நீர் வண்ண முகுந்த மாதவ

வென்ற வாய்ச்சிய ரின்னெடுந் தேத்தும்
முதிர விளங்கிய கதிதரு முல்லையு

(மருத நிலவளம்)

நீலக் கொன்மூ நின்றுகு றிருக்கையின்
கோல வெண்ணிலா குளிர்ப்பத் தோன்றியாங்கு
குவளைக் காட்டிடைக் கொழுமடல் விக்குபு
தவளா வோதிமந் தனிநடை புரியத்
தெண்ணீர் திரட்டுந் தேர்நல மடவார்
கண்ணீர்க் கொவ்வா கழுமலர் பறித்தவர்
கைம்மல ரேந்துங் கன்கொளாக் காட்சியி
லைம்மல ரவிழ்ந்தே யணிநகு பிலிற்ற
லழகிற் குடைந்த ரழுங்கு நீர்மையின்
மழைமதர் விழியிற் புலம்புறுத் துறைதலை
கடுக்குங் கலவ கவின்மயி லியலா
ரடுக்குஞ் சாயற் குடைந்து மயில்கள்
கானம் புக்கன காண்டரு கிள்ளை
தேனம ரமிழ்த மழலையந் தீஞ்சொற்
குடைந்தே யடைந்து வுயரிய குறிஞ்சி
கடைமணி சேப்பப் படைவிழி மாதர்
கொழுநரோ டூடக் குறித்திடு கிளியைத்
தழுவுங் குழவியிற் குலுங்குற மஞ்சுக
நகைபட நவிற்ற நாணுடை வாரார்
நகைபெற மன்னர் தலையுறும் பைங்கூழ்
மதவெண வோங்கி மனமகிழ் வாரே
யின்னனை பல்வளம் துன்று மருதமு

(நெய்தல் நிலவளம்)

மடப்பருங் கருணைவா ரம்புத வியவுளின்
விளங்குறும் பெரும்பிறை மின்னொடு முழங்கும்
திரைபெறு கார்கோள் நிறைய சாரலில்
விரைசெய் தாழை நிரையுடன் பனிச்சை
சேற்கண் ணங்கையர் செவ்வாய்த் துவரின்
வாய்ப்படு முரல் பண்மணி புரைதலின்
பரத மங்கையர் பனிமுறத் தெள்ளுறூஉஞ்
சரதமார் செய்தும் மணிப்பெருந் திணையுஞ்

## (தொண்டை நாட்டுச்சிறப்பு)

போற்றப் பெறூஉம் புண்ணியம் பழுத்து
மாற்றலி னுலகெலா மமைவுறப் பழுத்தே
களிமயி லுமையவள் கார்முகில் கேள்வனா
வறமென் றன்னை யருமையின் வளர்த்தூஉம்
துறந்தோ ரெய்துந் துறக்கத் தின்பம்
வருந்தா தடையும் வளவிய பதிகளுள்
கருந்தகைப் பொலியுங் கச்சிமா நகரும்
தமிழ்க்கு வரம்பாகுந் தனிவேங் கடமும்
குறுவெண் பாட்டாங் குலவு முதனூலா
மறிவினி லளந்த செறிதரு மன்மறை
தெய்வப் பாவலன் றேர்வள் ளுவவேயவள்
நெய்தற் றொழிலின் நேர்மை விளக்கி
வதியு நற்புகழும் வையக மோங்கப்
பொதியு ஞான போனக முண்ட
ஞானப் பிள்ளை நங்கை யுயிர்ப்பித்து
இறும்பூது சான்ற செறிதரு பொதும்பர்
வான்றோய் மயிலை வளந்தரு பதியு
முண்மைப் பொருளி னுயர்ச்சிகண் டாயில்
வண்மையிற் றெருடுபொருள் வாரி வீசிக்
காணினுங் கேட்பினுங் கருதினுங் களிதரு
சேணுயர் மாணிக்கத் தீங்கனிவாய் மடுத்துச்
சிவமெனப் பொலிந்த சித்தாந்த முணர்த்திய
வவமுறு முயிர்க ளெல்லாம் படாமே
கட்டுரை கிளந்த பட்டினத் தடிகள்
கட்டிக் கரும்பின் கனிரச மினிக்கு
மட்டிலாச் சீர்த்தியுங் கட்டழிற் காளை
யாரூர் நம்பி வாரூர் முகிழ்முலை
யறிவு நூல்களின் செறிதுறை போன
சங்கிலி யென்னுந் தனிமின் கொடியைப்
பொங்கெழிற் பரவை பூவையோ டிவளையும்
வதுவை யாற்றிய தன்றியு மறையவன்
கதுமென வேளாண் மகளெனப் பார்த்தில
னென்றே யுலகம் நகையெடு வழக்குத்

துன்றிச் செய்யத் துணைமனை முடித்த
கற்றைவார் சடையா னேற்றியா னுரு
மென்கவைக் கருவென வெடுத்திசை வாய்திகழ்
பண்களின் றொழுகும் பழமையு மெறிக்கு
ளவெண் பாவெனு நற்றமிழ்ப் பின்னட்ட
வளமுறு தமிழுக வானிது யிட்டிய
கலையி னகன்ற புகழேற்றிப் புலவனும்
தொட்டால் மணக்கும் தாக்தமிழ் பாட்டி
லெட்டாப் புகழுறு மெழில்படைத் தாகம்
பிறங்கிய தொண்டை நிறந்தகன் னாட்டில்
நாலாறு கோட்டத்து மேலாறு மயங்கும்
புலியூர்க் கோட்டப் பூம்பதி பலவினுந்
தலையினிற் சூடுந் தனிமணி பொன்னார்
கிளர்ந்து விளங்கித் தமிழின்
பாவை புரக்கும் பூவை கிழவோனே.

—

## வெண்பா

மெய்யிற் றிருநீறு பொன்மார்பிற் சிவமணியும்
கையிற் பதிகமும் பண்பாடும் — துய்யவான்
நன்மணி யும்பொலியும் நாவலர் கத்தாவன்றன்
தன்னொளியின் வீடும் தமிழ்.

முத்தமிழிற் கவின்றுணர்ந்து பாவாட் புகழ்பெருமா
மத்தன் திருவருளி னூறுவாழ்ந்து — சித்தமே
சிக்கலாற்று செவ்வ திலேபெருமா மெய்ந்நூலை
மாக்கலா ரின்ப வமுது

முன்னைத் தமிழ முதுதுணர்ந்து வாழ்புலா
பின்னைப் பெரும்பேறு மெய்தலா — மன்னைச்
சிவபோக வாரி திளைக்கலாஞ் சீரி
லவபோகந் தீரலா மாங்கு.

## தனியன்

### அறுசீராசிரியம்

எட்டானபேருருவம்வாய்ந்துலகினைப்புரக்குமெய்ம்மான்றன்னை
உட்டானத்தேகாணற்கொருசோபானப்பொருளாம்போங்குமெய்ம்
கட்டானபராபரன்ஞானத்தையெமக்களித்துக்காத்தருளுமைக்
அட்டாவதானியெனுங்கலியாணசுந்தரனல்லடிகள்போற்றி.